# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை


சுடர் – 57
விலை ரூபாய் 30.00

தீபம்–57 | சித்திரை இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, அல்லேலூயா! (தி.பா : 118:24)**




## குவாடலூப்பே பங்கின் புனித குவாடலூப்பே அன்னை ஞாயிறு மறைப்பாடசாலையின் 2019ம் ஆண்டிற்கான அங்குரார்ப்பணம்







27.01.2019 ஞாயிற்றுக்கிழமை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் 2019ம் ஆண்டிற்காக ஞாயிறு பாடசாலை உப–அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புதிய நியமனம் திருப்பலியோடு சிறப்பிக்கப்பட்டது. இச்சிறப்புத் திருப்பலி அருள்பணியாளர் அல்பிரட் விஜயகமலன், அ.ம.தி அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்குத் தந்தையும் ஞாயிறு பாடசாலை அதிபருமான அருள்பணியாளர் பா. ஜெயபாலன், அ.ம.தி. அவர்களால் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர்களுக்கு சின்னங்கள் வழங்கும் சடங்குடனும் இறையாசீருடனும் இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

தகவல்: பங்குத் தந்தை.

## கொழும்பு கரித்தாசின் தவக்கால நடவடிக்கைகள்



Setha Sarana எனப்படும் கொழும்பு கரித்தாஸ் அமைப்பின் இயக்குனர் அருள்பணி Ramanayake அவர்கள் ஆசியச் செய்தியிடம் இந்நடவடிக்கைகள் பற்றி விளக்குகையில், இந்த தவக்காலத்தில் திரட்டப்படும் ஒவ்வொரு பைசாவும், இளையோர் தொழிற் கல்வி பயிற்சிக்கும், மாற்றத்திறனாளர் சிறார்க்கு ஆதரவான செயல்பாடுகளுக்கும், புற்றுநோயாளிகள் பராமரிப்புகளுக்கும் செலவழிக்கப்படும். எனத் தெரிவித்தார்.

ஆதாரம் : வத்திக்கான் வனொலி

## சமூக விழிப்புணர்வுக் கருத்தமர்வு

மேற்படி கருத்தமர்வு புனித குவாடலூப்பே பங்குக் கிறிஸ்தவ வாழ்வுச் சமூக உறுப்பினர்களின் ஏற்பாட்டிலும் பங்குத்தந்தை பா. ஜெயபாலன், அ.ம.தி. அடிகளாரின் வழிகாட்டலிலும் 10.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி தொடக்கம் 12:00 மணிவரை நடைபெற்றது. மனித உரிமை மீறல் ஆணைக்குழுவில் பணியாற்றும் புலனாய்வு உத்தியோகஸ்தர் திரு. S. அருண் அவர்களின் நெறிப்படுத்தலில் சமூக சீர்கேடு பற்றி, குறிப்பாக – போதைவஸ்து, முகநூல், பாலியல் மற்றும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் போன்றவை பற்றிய விரிவுரையும், மதிப்பீடும் திரையிட்டு, விவரிக்கப்பட்டது. எமது மறைமாவட்ட இவ் ஆண்டிற்கான கருப்பொருள்களில் ஒன்றான ‘சமூக விழிப்புணர்வு’ என்பதற்கு செயலூக்கம் கொடுக்கும் வண்ணம் மேற்படி கருத்தமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குவாடலூப்பே பங்கின் குவாடலூப்பே அன்னை ஆலய மற்றும் பள்ளத்தோட்டம் புனித வேளாங்கண்ணி ஆலய ஞாயிறு பாடசாலை மாணவர்களும், இளைஞர் யுவதிகளும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தகவல்: திருமதி ஆர். நிரோஷா.
கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம்.
குவாடலூப்பே பங்கு, திருகோணமலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக (தி. பா: 105 : 3)**

சுயவிழிப்புணர்வுத் தொடர் : 02

# இன்னுமா தயக்கம்!

## உண்மையில் வாழ்வோம்!



இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! **திருமலை தீபம் இதழ்** வாயிலாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். சென்ற இதழில் **அனுபவ அறிவே** முழுமையான அறிவு என்று பார்த்தோம். இதற்கு இன்னும் ஒரு சில தெளிவுகளை இந்த இதழில் பார்ப்போம்.

அனுபவங்களைக் கொண்டு முழுமையான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது நம் முன்னோர் கூறிய ஒன்று. அப்படியானால் **"புத்தக அறிவு நமக்குத் தேவையில்லையா? திருவிவிலியம் கூட ஒரு புத்தகம் அல்லவா? அப்படியானால் ஆண்டவரின் வாழ்வு தரும் வார்த்தைகள் அடங்கிய திருவிவிலியம் எத்தகைய மதிப்பைப் பெறுகின்றது?"** போன்ற பல கேள்விகள் உங்கள் மனதில் எழலாம். இதற்குரிய பதிலாக, புத்தக அறிவு என்பது எத்தகையது? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். புத்தகமும், **நாம் பேசி உரையாடுகின்ற மொழி நடையில்** தான் அமைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே இந்த மொழி நடை மூலம் முழுமையான அறிவைத் தர முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காகத் தான் ஒரு மாமேதை உங்கள் வீட்டிற்கு வந்துள்ள எடுத்துக் காட்டைப் பார்த்தோம். **நேரில் கண்டு அனுபவிக்கும் அறிவிற்கும் வார்த்தைகளில் பெற்றுக் கொள்ளும் அறிவிற்கும் மிகப் பெரிய வித்தியாசம்** இருப்பதைக் காண்கின்றோம். அப்படியானால், வார்த்தைகளில் கூறப்படும் அறிவு தேவையற்றதா? இந்த உலகில் அனைத்து விடயங்களையும் விளக்குவதற்கு புத்தகங்களைத் தானே நாம் பயன்படுத்துகின்றோம்? அப்படியானால் **புத்தகப் பயன்பாடு என்பது வீணா?**

நிச்சயம் புத்தகம் வீண் அல்ல. ஆனால் அந்த புத்தக அறிவை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு ஊருக்கு செல்லும் வழியில் பல **பெயர் பலகைகளைப்** பார்த்திருப்போம். குறிப்பாக திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு செல்லும் சாலையில் மட்டக்களப்பு பெயரைத் தாங்கிய வழிகாட்டும் பெயர்ப்பலகைகள் பல இருக்கின்றன. அந்த **பெயர்ப்பலகைகளில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு நான் மட்டக்களப்பிற்கு வந்துவிட்டேன்!** என்று கூறுவது சரியாக இருக்குமா? சில ஊர்களுக்குச் செல்லும் போது ஊரின் எல்லையில் அந்த ஊரின் **சிறப்புக்கள் பற்றிய குறிப்புப் பலகையும்** இருப்பதைக் காணலாம். அந்த குறிப்புக்களைப் பார்த்துவிட்டு **நான் இந்த ஊரைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டேன்** என்பது சரியாக இருக்குமா?

ஊருக்குச் செல்ல வழிகாட்டும் பெயர்ப்பலகை **இந்த வழியாகச் சென்றால் இந்த ஊருக்குச் செல்லலாம்!** என்ற செய்தியைச் சொல்கின்றதே தவிர **அவை அந்த ஊர் அல்ல**. அது போன்று ஊரின் சிறப்பு பற்றிய குறிப்பு, இந்த ஊரில் இத்தகைய சிறப்புக்கள் இருக்கின்றன என்று ஒரு குறிப்பைத் தருகின்றனவே தவிர அவையே அந்த ஊரின் சிறப்புகள் அல்ல. மேலும், **வழியில் பெயர்ப்பலகைகளே இல்லையென்றால், நாம் வழிதவறிவிட பல வாய்ப்புக்கள் இருக்கின்றன**. எனவே பெயர்ப்பலகைகள் நிச்சயமாக நமக்குத் தேவைதான். அது போல **புத்தகங்களும் நமக்குத் தேவை** தான். ஏனென்றால் அவற்றின் மூலமே, **உண்மையறிவை நாம் எப்படிப் பெற்றுக்கொள்ளலாம் என்ற தெளிவைப்** பெற்றுக் கொள்கிறோம். எனவே புத்தக அறிவு நமக்கு முழுமையான அறிவை எப்படிப் பெறுவது என்னும் வழிகாட்டுதலைத் தருகின்றதே தவிர அதுவே முழுமையான அறிவாக இருக்க முடியாது. விவிலியமும் கூட இத்தகைய அறிவைத் தான் தருகின்றது. **விவிலியம்**, இந்த உலகில் வேறு எந்த புத்தகமும் காட்ட முடியாத அளவிற்கு **மிகச் சிறந்த வழிகாட்டி** நூலாகும். **விவிலிய வாசகம், நமக்கு நன்மையைச் சுட்டிக் காட்டும் பாதையாகும்**. எனவே விவிலிய வார்த்தைகள் **உயிருள்ள வார்த்தைகளாக வாழ்வளிக்கும் செய்தியாக** மாறவேண்டுமென்றால் அந்த **விவிலிய வாசகங்களை நாம் நம் வாழ்வில் செயல்படுத்த வேண்டும்**. அப்படி செயல்படுத்தாமல் **வார்த்தைகளை மட்டும்** பிடித்துக்கொண்டு **நான் விவிலியம் காட்டும் உண்மைக் கிறிஸ்தவன்!** என்று சொன்னால், நாம் **பொய்யை விட மோசமான ஒன்றைச் சொல்கின்றோம்** என்று பொருள். இதையே **"செயலற்ற விசுவாசம், செத்த விசுவாசம்"** என்று புனித பவுலடிகளார் கூறுகின்றார்.

இதைத்தான் **ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது** என்பார்கள். வெறும் புத்தக அறிவு மட்டும் வாழ்க்கையை சரியாக செலுத்துவதற்கு போதாது. அனுபவமும் வேண்டும் என்பதையே இது நமக்குக் காட்டுகின்றது. ஏனென்றால் ஏட்டுக் கல்வியை விட மிகவும் **ஆழமான கல்வி என்பது அனுபவக் கல்வி மட்டுமே**. இந்த அனுபவக் கல்வியானது, யாரும் கற்றுக்கொடுத்து வருவதில்லை. மாறாக நம் **மனதைத் திறந்து வைப்பதன் மூலம் நாமே அதைக் கற்றுக் கொள்கின்றோம்**. இந்த அனுபவக் கல்வியே இறைவனால் கற்பிக்கப்படுகின்றது என்றால் அது மிகையாகாது. இந்த **அனுபவங்களுக்கு முன்னுரையாகவும் சிறிய விளக்கமாகவுமே ஏட்டுக்கல்வி** இருக்கின்றது. இதனை பின்வரும் விளக்கத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**கிறிஸ்தவர்களாகிய நாம் திருவிவிலியத்தை** நமது வாழ்வுக்கு வழிகாட்டும் நூலாக வைத்திருக்கின்றோம். அதை **தினமும் படிக்கின்றோம்**. அது போல **ஒவ்வொரு மதத்தவரும் அவரவர் மதத்து புனித நூலை** வழிகாட்டும் நூலாக வைத்திருக்கின்றார்கள். அப்படியானால், இந்த உலகில் **அனைத்து மக்களுமே ஏதாவது ஒரு மதத்தால் வழிநடத்தப்படுகிறார்கள்**. இங்கே, எந்த மதமும் தவறானவற்றை கற்பிப்பதில்லை. எனவே இவ்வுலகில் அனைவருமே மிக நல்லவர்களாக, மதங்கள் காட்டும் சிறந்தவர்களாக வாழ்ந்திருக்க வேண்டும்.

ஆனால், **கிறிஸ்தவர்களாகிய** நாமே, ஆண்டவர் இயேசு மிக முக்கியமாகக் கூறிய **அன்பு செய்யுங்கள்! என்ற ஒரு கட்டளையைக் கூட கடைப்பிடிக்க முடியாமல் திண்டாடுவதைக் கண்டால்**, நமக்குக் குழப்பமாகத் தான் இருக்கின்றது. **திருவிவிலியத்தைத் துணையாகக் கொண்டு இலட்சக்கணக்கான புத்தகங்கள் இந்த அன்பைப் பற்றி** குறிப்பிடுகின்றன. பல்லாயிரக்கணக்கான சிறுகதைகள், மறையுரைகள், சமய வழிபாடுகள் என்று எத்தனை எத்தனையோ, இந்த அன்பைப் பற்றி கற்பித்திருந்தும், அன்பு என்பது இன்று வரை சாத்தியமற்றதாகவே இருக்கின்றது. இந்த அன்பை **சாத்தியப்படுத்தியவர்களையே** திருஅவை **புனிதர்கள்** என்றழைக்கின்றது. அப்படிப் **புனிதர்கள்** என்றழைக்கப்படுபவர்கள் இந்த உலகில் **மிகவும் குறைவானவர்களே**. இது தான் நடைமுறை: புத்தக அறிவால் மக்கள் அறிவைப் பெற்றுக் கொள்ளவில்லை.

குழந்தைகளைப் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒரு வயதாகும் போது அவர்கள் **கொஞ்சம் கொஞ்சமாக நடக்க ஆரம்பிக்கின்றார்கள்**. அவர்கள் நடக்கும் போது யாரும் அவர்களுக்கு **நடப்பதைப் பற்றி அறிவியல் விளக்கத்தை** சொல்லிக்கொடுத்து நடைபழக்குவதில்லை. அவர்களாக எழுகின்றார்கள். எதையாவது பிடித்து கொஞ்சம் கொஞ்சமாக நடக்க ஆரம்பிக்கின்றார்கள். இந்த நடக்கும் செயலை ஒரு பொறியியல் படிக்கும் மாணவனிடம், அதன் அறிவியல் விளக்கத்தைக் கேட்டால் அவன், **புவியீர்ப்பு விசைக்கு எதிராக நாம் எப்படி கால்களை வைக்க வேண்டும், எந்த வேகத்தில் கால்களை நகர்த்த வேண்டும்** என்பது போன்ற அறிவியல் விளக்கங்களை பக்கம் பக்கமாக எழுதித் தருவான். இதுபோன்ற **புத்தக விளக்கங்களை** ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் **யாருமே படித்திருக்க மாட்டார்கள்**. ஆனால், அறிவியல் பூர்வமான விளக்கம் அது தான். அப்படியானால், **இந்த விளக்கங்களையெல்லாம் தெரியாமலேயே ஒரு குழந்தை நடந்துவிடுகின்றது**. இந்த விளக்கங்களைப் பற்றிய எந்த கவலையுமில்லாமலேயே நாம் நடக்கின்றோம், ஓடுகின்றோம், எல்லா செயல்களையும் செய்து கொண்டிருக்கின்றோம். **வாழ்க்கைக்குத் தேவையான இந்த முக்கியமான செயல்களைப் பற்றி யாரும் எந்த விளக்கங்களையும் புத்தகமாக எழுதவில்லை**. அப்படியிருந்தும், நடக்கத் தெரியாத மனிதர்கள் யாருமில்லை. எப்படி இதை நாம் கற்றுக் கொண்டோம்? இதுவே அனுபவக் கல்வியின் மகத்துவம். **நாம் எவ்வெவற்றை அனுபவித்துக் கற்றுக் கொள்கிறோமோ, அவற்றிற்கு வெளியேயிருந்து விளக்கங்கள் தேவையில்லை. ஆனால் அனுபவித்து அறியாத அறிவிற்கு எத்தகைய விளக்கங்கள் வெளியேயிருந்து வந்தாலும் அவற்றால் ஒரு பயனுமில்லை**.

நண்பர் ஒருவர் தன் இன்னொரு நண்பரைச் சந்திக்கிறார். அப்போது முதலாமவர், மற்றவர் **முகத்தில் அழுக்கு இருப்பதைச் சுட்டிக்** காட்டுகின்றார். உடனே, மற்றவர் தன் பையிலிருந்து **ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை** எடுத்து தன் முகத்தைப் பார்த்து அந்த அழுக்கை துடைக்கின்றார். அப்போது, முதலாமவர் கேட்பார், **நண்பா, நான் சொன்ன வார்த்தையை நம்பாமல், ஒரு உயிரற்ற கண்ணாடியை நம்புகிறாயே,** இது தான் நீ என் நட்புக்குக் காட்டும் மரியாதையா என்று! அப்போது மற்றவர் கூறுவார், உன்னை நான் நம்பினதால் தான் இந்தக் கண்ணாடியை எடுத்துப் பார்த்தேன். நீ சொன்னது ஒரு செய்தி. அந்த **செய்தியை நடைமுறைப்படுத்துவதற்கு நான் அதை அனுபவிக்க வேண்டும். என் அனுபவத்தின் மூலம் தான் அதை முழுமையாக உணர முடியும்**. அப்படி முழுமையாக உணர்ந்தால், அந்தக் **குறையை எப்படி சரி செய்யலாம் என்று தெளிவாக எனக்குத் தெரியும்!** என்றாராம். அந்த முதல் நண்பர் புத்தகம் என்று கொண்டால் முகம் பார்க்கும் கண்ணாடி, அனுபவத்தைக் கொடுக்கும் ஒரு பொருள்.

எனவே எதையெல்லாம் நாம் அனுபவபூர்வமாக கற்றுக் கொள்கிறோமோ, அவையே நமக்கு **நிலைத்த உறுதியான மற்றும் உபயோகமான அறிவைத்** தருகின்றன. இவற்றையே நாம் '**உண்மை**' என்கிறோம்.

இந்த **அனுபவங்கள்** எத்தகையவை என்பதை வருகின்ற இதழில் காண்போம்.
அதுவரை உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன். நன்றி!

**இறையாசீருடன்,**
**அருட்பணி. அலெக்ஸ் க.ச.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயரின் செய்தி

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

தவக்காலத்தினுள் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இத் தவக்காலம் எமது ஆன்மீக வாழ்வில் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தி புதுவாழ்வினுள் அழைத்துவர, ஆண்டவர் இயேசுவோடு சிறப்பாக நெருங்கி வர வாழ்த்துகின்றேன்.

தவக்காலத்தை மையமாகக் கொண்டு எமது மறைமாவட்டத்தில் பல ஆன்மீக செயல்பாடுகள் பங்குகள் மட்டத்திலும் மறைமாவட்ட மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டன. மார்ச் மாதம் 16,17ம் தினங்களில் இறையிரக்கத் திருத்தலத்தில் இரண்டு நாள் செப ஆராதனையும், விவிலிய சிறப்புரைகளும், ஒப்புரவு அருட்சாதன நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன. அனைத்துப் பங்குகளிலிருந்தும் வேறு மறைமாவட்டங்களிலிருந்தும் நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வுகளைத் திட்டமிட்டு, ஒழுங்கு செய்து நடாத்திய பங்குத்தந்தை அருட்தந்தை மதுராங்கள் குரூஸ் அடிகளாருக்கும் இவரோடு இணைந்து செயல்பட்ட குருக்கள், துறவறத்தவர், பொதுநிலை விசுவாசிகளுக்கும் எமது பாராட்டுக்கள்.

மார்ச் மாதம் 22, 23 திகதிகளில் 24 மணிநேர நற்கருணை ஆராதனை எமது மறைமாவட்டத்தில் 20 ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்றது. இதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்த அனைத்துப் பங்குத்தந்தையர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

30ம் திகதி பாலையூற்றுப் பங்கில் மறைமாவட்ட தவக்கால செப வழிபாட்டை ஒழுங்குசெய்த இயக்குனர் அருட்தந்தை மதுராங்கள் குரூஸ் அடிகளாருக்கும், பங்குத் தந்தை அருட்தந்தை நிதிதாசன் அடிகளாருக்கும் இணைந்து செயல்பட்ட ஒவ்வொருவருக்கும் எமது பாராட்டுக்கள்.

ஏப்ரல் மாதம் 6ம் திகதி சனிக்கிழமை வழமைபோல சீனன்குடாப் பங்கில் அமைந்துள்ள நாச்சிக்குடா சிலுவைமலையில் எமது வருடாந்த சிலுவைப்பாதைத் தியானமும் திருப்பலியும் இடம்பெறும். இதற்கு வேண்டிய ஒழுங்குகளை பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் திசாநாயக்க அடிகள் ஆயத்தம் செய்துள்ளார். மறைமாவட்ட ரீதியில் நடைபெறும் இவ் ஆராதனை நிகழ்வுக்கு அனைவரும் பங்குபற்றி பயன்பெறுவோம்.

துவக்காலத்தில் நாம் பலவகையான ஆன்மீக ஆயத்தங்களைச் செய்கின்றோம். இவை எமது ஆன்மீக வாழ்வை வளர்ப்பதற்கு உதவியாக அமைகின்றன. இவற்றின் உச்சமாக புனித வார வழிபாடுகள் அமைந்துள்ளன. திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு முதல் பாஸ்காத் திருவிழிப்பு திருப்பலிவரை எம்மை இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்போடு ஆழமாக ஒன்றிக்க தாய்த் திருஅவை சிறப்பான முறையில் வழிபாடுகளை அமைத்துத் தந்துள்ளது. இவ்வழிபாடுகளில் நாம் முழுமையாகப் பங்கேற்றுப் பயனடைவோம். எமது ஆன்மீக செயல்பாடுகள் அடுத்தவரையும் ஆண்டவரிடம் அழைத்துவர வேண்டும்.

நாம் வருடாவருடம் பாஸ்காத் திருவிழிப்புத் திருப்பலியை சனிக்கிழமை இரவு 11.30க்கு ஆரம்பிப்பதுண்டு. இதனால் திருப்பலியின்போது எடுக்கப்படும் 9 வாசகங்களுக்குப் பதிலாக 5 வாசகங்கள் மட்டும் வாசிக்கப்படுவதுண்டு. அது முறையற்றது. மீட்புத் திட்ட சரித்திரத்தை மையப்படுத்தியே இந்த 9 வாசகங்களும் அமைந்துள்ளன. எனவே அனைவருக்கும் வசதியாக சனிக்கிழமை வழிபாடுகள் அன்று இரவு 7.30 மணியளவில் ஆரம்பமாகும் என மறைமாவட்ட மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உங்கள் பங்குத்தந்தையர் இதற்கான விளக்கத்தை உங்களுக்குத் தருவார்கள்.

தொடக்கத்தில் இறைவன் வாக்களித்தவாறே உரிய காலத்தில் மீட்பரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். மீட்பராம் இயேசு இறைத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தனது இலக்காகக் கொண்டு செயல்பட்டார். இடையில் பல சவால்கள், எதிர்ப்புகள், சோதனைகள். இயேசு "சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்" (பிலி 2: 8). இயேசுவின் பாடுகள், மரணம் வீண்போகவில்லை. கடவுள் அவரை மூன்றாம்நாள் உயிர்த்தெழச் செய்தார். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15: 14) என்பது புனித பவுல் சுட்டிக்காட்டும் உண்மை. இவ்வாறு இறைவன் வாக்களித்தவாறே இயேசு தனது மீட்பின் கடமையை நிறைவேற்றினார். தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலம் பாவம், மரணத்திலிருந்து உலகை மீட்டார். அலகையை வென்றார். இந்த மீட்பை நாம் எமதாக்க எமது ஆன்மீக, சமூக வாழ்வை பலப்படுத்த வேண்டும். தனித்து, குடும்பமாக, பங்குச் சமூகமாக, மறைமாவட்டமாக செயல்பட்டு நாம் மீட்படைவோம், அடுத்தவரையும் மீட்பு வாழ்வுக்குள் அழைத்து வருவோம்.

இம்மாதம் 13ம் 14ம் திகதிகளில் சிங்கள தமிழ் புத்தாண்டைக் கொண்டாடும் எமது சிங்கள, தமிழ் சகோதர சகோதரிகளுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது ஆன்மீக சமூக வாழ்வு மேலும் சிறக்க உயிர்த்த ஆண்டவரின் ஆசீர் உங்களோடு என்றும் இருப்பதாக.

**கிறிஸ்துவில்,**
**பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.**

# பதிப்பாசிரியர் பகிர்வு



அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்



நாற்பது பொன்னான நாட்களை உள்ளடக்கிய தவக்காலத்தை, அருளின் காலத்தை தொடர்ந்தும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி ஆன்மீக வாழ்வில் புது மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, பழைய பாவ வாழ்விலிருந்து வெற்றி வீரராக உயிர்தெழுந்து புதுவாழ்வுக்கு உயிர்த்த இயேசுவோடு பயணிக்க, வாசகப் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

ரவீந்திரநாத் தாகூரின் 'ஆலயம் செல்லாதீர்' ('Go not to the Church' - by Rabindranath Tagore) என்ற வரிகள் நம் வாழ்வுக்குச் சிறந்த வழி காட்டி புத்துயிர் பெற்று வீறுநடைபோட பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையில் தொடர்கின்றேன்.

பரமனின் பாதங்களுக்கு மலர் அர்ச்சனை செய்ய ஆலயம் செல்லாதீர்!
உங்கள் இல்லங்கள் அன்பு, இரக்கம் என்னும் நறுமணங்களால் நிரம்பப்பட்ட பின் ஆலயம் செல்லுங்கள்.

ஆண்டவன் பீடத்தில் ஒளியேற்ற ஆலாயம் செல்லாதீர்?
உங்கள் உள்ளத்திலிருந்து பாவம், தற்பெருமை, அகங்காரம் என்னும் இருள் அகற்றிய பின் ஆலயம் செல்லுங்கள்.

சிரம்தாழ்த்தி செபிக்க ஆலாயம் செல்லாதீர்?
சக மனிதரிடம் உன்னைத் தாழ்த்திக்கொள்ள, செய்பிழைக்கு மன்னிப்புக் கோரக் கற்றுக்கொண்ட பின் ஆலயம் செல்லுங்கள்.

மண்டியிட்டுச் செபிக்க ஆலயம் செல்லாதீர்?
வீழ்ந்து கிடப்பவனைத் தூக்கி நிறுத்த, இளையோரைப் பலப்படுத்த உன் கால்கள் மண்டியிட்ட பின் ஆலயம் செல்லுங்கள்.

பாவங்களுக்கு மன்னிப்புக்கோர ஆலயம் செல்லாதீர்?
உன்னைக் காயப்படுத்தியவருக்கு மனதார மன்னிப்புகொடுத்த பின் ஆலாயம் செல்லுங்கள்.

மொத்தத்திலே உயிர்த்த ஆண்டவரின் அருள்பெற்று, வாழ்வில் புதிய கண்ணோட்டத்தோடு, புதிய உத்வேகத்தோடு முன்னேற வாழ்த்துக்கள்.

# சித்திரை 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

02.04.2019 செவ்வாய்க்கிழமை
: குருக்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல்

06.04.2019 சனிக்கிழமை
: மறைமாவட்ட பொதுத் திருச்சிலுவைப் பாதைத் தியானம், கல்வாரித் திருத்தலம், நாச்சிக்குடா.

07.04.2019 ஞாயிற்றுக்கிழமை : தவக்காலம் 5ம் ஞாயிறு.

13.04.2019 சனிக்கிழமை : தவக்காலத் தியானம் - மரியாயின் சேனை.

14.04.2019 ஞாயிற்றுக்கிழமை
: ஆண்டவரின் பாடுகளின் குருத்து ஞாயிறு.

15.04.2019 திங்கள்கிழமை
: திருத்தைல மந்திரிப்புத் திருப்பலி
புனித மரியாள் பேராலயம்.

18.04.2019 வியாழக்கிழமை
: புனித வாரம் - ஆண்டவரின் இரவு விருந்து.

19.04.2019 வெள்ளிக்கிழமை
: புனித வாரம் - ஆண்டவரின் திருப்பாடுகளின் வெள்ளி.

20.04.2019 சனிக்கிழமை : பாஸ்காத் திருவிழிப்பு.

21.04.2019 ஞாயிற்றுக்கிழமை : ஆண்டவருடைய உயிர்ப்பின் ஞாயிறு.

22.04.2019 திங்கள்கிழமை: பீடப்பணியாளர்கள் - கிறிக்கட் போட்டி.

27.04.2019 சனிக்கிழமை
: ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.
: புனித வின்சன்ட் டி பவுல் மறைமாவட்ட (மாதாந்தக் கூட்டம்)
: சிறிய கிறிஸ்தவ குழும (அன்பிய) ஊக்குவிப்பாளர்களின் மறைமாவட்டக் குழுக் கூட்டம்.

28.04.2019 ஞாயிற்றுக்கிழமை : இறை இரக்கப் பெருவிழா.
: அலஸ்தோட்டம் இறைஇரக்கத் திருத்தல வருடாந்தத் திருவிழா.
: சிறிய கிறிஸ்தவ குழும (அன்பிய) பங்குத் தரிசிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 21

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## கடமை ஒன்றே

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பது பகவத்கீதையின் சாரம். எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராது "நன்றி" என்ற சொல்லைக் கூட எதிர்பாராமல் கடமை புரிதல் என்பது சாதாரண மனிதனால் முடியாத காரியம். சிறிய உதவிக்கும் பெரிய பரிசை எதிர்பார்க்கும் இக்காலத்தில் இது எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வி எழுகின்றது. ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் இந்த மனப்பாங்கு இருப்பது இன்றியமையாததாகும். நல்லாசிரியரொருவர் பிரதிபலனை எதிர்பார்த்து செயற்படுபவர் அல்ல. ஆசிரியப்பணியில் மட்டுமல்ல குடும்பத்திற்குள் கூட பிரதிபலனை எதிர்பார்க்காமல் வாழும்போது பல ஏமாற்றங்களையும் வலிகளையும் தவிர்க்க முடியும். குழந்தையொன்றினுள் புதைந்திருக்கும் ஆற்றல்களை உச்ச நிலைக்கு வளர்த்து விடுவதே நல்லாசிரியர் ஒருவரின் ஒரே நோக்கமாக இருக்கும். புனித இக்னேசியஸ் லோயலாவின் செபமே நல்லாசிரியர் ஒருவரது செபமாக அமையும்.

Teach us Lord to Serve you as your deserve
to give and not to count the cost
to fight and not to heed the wounds,
to labour and not to ask for any reward,
save that of knowing that we do your will.

நாளாந்தக் கடமைகளை நேர்த்தியாகவும், முழுமையாகவும் செய்து முடிப்பதே நல்லாசிரியர் ஒருவரின் ஒரே நோக்கமும் மனத்திருப்தியும் ஆகும். அதுவே அன்றாடம் அவருக்குக் கிடைக்கக் கூடிய பரிசாகும். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்" என்ற முதுமொழிக்கு ஏற்ப நல்லாசிரியர் ஒவ்வொருவருக்கும் அவர்களது தன்னலமற்ற சேவையின் பரிசு ஏதோ ஒரு வகையில் அவர்களை வந்து சேரும். பலனை எதிர்பாராது மாணவர்களின் நலனை மட்டுமே கருத்தாகக் கொண்டு சேவையாற்றிய நல்லாசிரியர்களின் குடும்பங்கள் நிறைவான இறையாசீர் பெற்றதற்கு நாம் எல்லோரும் சாட்சிகள்.


கொன்பியூசியஸ் என்ற அறிஞரின் பொன்மொழிகள் இங்கு பொருத்தமானதாக இருக்கும்.

"Every piece of marble has statue in it waiting to be released by a man of sufficient skill to chip away the unnessary parts. Just as a sculptor is to the marble so is education to the soul. It release it. For only educated men are free men. You cannot create a statue by smashing the marble with a harmer, and you cannot by force of arms release the spirit of the soul of man"

---

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



### 37. உரோமையில் ரொமேரோ

ரொமேரோ உரோமையில் ஆறு ஆண்டுகள் படிக்க தங்கியிருந்தார். உலகிற்கும் திருச்சபைக்கும் நெருக்கடியான காலம். அப்போது திருத்தந்தையாக இருந்த 11ம் பத்திநாதரைப் பார்த்து ரொமேரோ வியப்படைந்தார். இரண்டாம் உலகப்போரின் பாசிசம், தீவிரவாதம், நாசிசம், பிறரை அடக்கும் ஏதேச்சதிகாரம் இவற்றை திருத்தந்தை கண்டித்தார். இந்த தைரியத்தை ரொமேரோ பாராட்டினார்.

சான் சால்வதோரின் பேராயரான பின்பு உரோமைக்குப் போகும் போது அவர் 11ஆம் பத்திநாதரின் கல்லறையைச் சந்தித்து செபித்தார். அவரை மிகச் சிறந்த திருத்தந்தையாகக் கருதினார்.

இந்த உணர்வுகள் குருமாணவனாக இருக்கும் போது தூக்க நிலையில் இருந்தன. அவரது மகிமையில் அனைத்தும் வெளிப்பட்டன.

### 38. கிறிஸ்தவக் கடமையும் ரொமேரோவும்

ரொமேரோவின் சர்வதேச தலைமைபீடத்துக்கான குரல் கண்டுகொள்ளப் படவில்லை. தோழமை ஆயர்கள் கூட கண்டு கொள்ளாதது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஓர் ஆயர் அவருக்கு எதிராகவும் பேசினார். ஆனால் ரொமேரோ தொடர்ந்து நிறுவனமயமாக்கப்பட்ட வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். அதனை தனது கிறிஸ்தவ நாகரீக கடமையாகக் கருதினார்.

ஆனால் வலதுசாரிகள் கொலை மிரட்டலை அதிகப்படுத்தினார்கள். உயர் மறைமாவட்டத்தின் செய்தித்தாள் மற்றும் வானொலி நிலையத்தை குண்டு வீசி தகர்த்தனர்.

1979இல் நான்கு குருக்கள் கொல்லப்பட்டனர். மேலும் நூற்றுக்கணக்கான வேதியர்கள், இறைவார்த்தையை போதிக்கும் பொதுநிலையினர் கொல்லப்பட்டனர். மாதத்திற்கு சராசரியாக 3000 விவசாயிகள் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் சால்வதோர் மக்கள் கொல்லப்பட்டனர்.

3இலட்சம் பேர் காணாமல் போயினர். 10 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறினர். மொத்த மக்கள் தொகையே 55 இலட்சம் தான்.

### 39. நம்பிக்கையின் இறைவாக்கினர் ரொமேரோ

ரொமேரோவிடம் மக்களுக்கு கொடுப்பதற்கு எதுவுமில்லை. இருந்ததெல்லாம் நம்பிக்கையும் எதிர்நோக்கும் தான்.

அவரால் முடிந்ததெல்லாம் வானொலி மூலமாக அவரது மறையுரையில் நம்பிக்கையைக் கொடுப்பது, அரசியல் சூழலைச் சொல்வது, அநீதியைச் சுட்டிக் காட்டுவது, வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்வது, போராட்டங்கள் வெல்லும் என்பதை நிலைநாட்டுவது, போராளிகள் வீரச்சாவு வீண்போவதில்லை என்று உறுதியூட்டுவது மட்டுமே.

எதுவும் நடக்காது, மாற்றம் சாத்தியம் இல்லை, எல்லாம் விதி என்ற கல்லறையின் இறைவாக்கினர் கூட்டத்தில், மாற்றம் உறுதி, இதைக் கடவுள் விரும்புகிறார் என்ற நம்பிக்கையின் விதை ரொமேரோவிடம் இருந்தது. நம்பிக்கையின் விதை விதைத்தவர் ரொமேரோ.

### 40. உயிர்ப்பின் ஆயர் ரொமேரோ

பேராயர் ரொமேரோவின் பணி வாழ்வில் பலமுறை கொலை மிரட்டல்கள் வந்தன. அவர் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை.

நாளடைவில் அவர் வயது முதிர்ந்த நிலையில் சாகப் போவதில்லை, இன்றோ நாளையோ அவர் சுட்டுக் கொல்லப்படலாம் என்பது ரொமேரோவுக்குத் தெளிவானது.

அவர் கொல்லப்படுவதற்கும் இரண்டு வாரங்களுக்கு முன்பு மெக்சிகன் பத்திரிகை ஒன்றுக்கு தொலைபேசியில் கொடுத்த பேட்டியில் 'நான் பலமுறை கொலை மிரட்டல்களுக்கு உள்ளாகியுள்ளேன். கிறிஸ்தவன் என்ற முறையில் மரணம் இல்லாமல் உயிர்ப்பு இல்லை என்பதை நம்புகிறேன். நான் கொல்லப்பட்டால் சால்வதோர் மக்களில் உயிர்த்தெழுவேன். இதை மகிழ்ச்சியாக ஆனால் பெருமையாக அல்ல, பெரும் தாழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆயர் என்ற முறையில் இறைக் கட்டளைப்படி நான் அன்பு செய்பவர்களுக்கு என் உயிரைக் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன். எல் சால்வதோர் மக்களுக்காகவும் என்னைக் கொல்வர்களுக்காகவும் இந்நேரம் முதல் கொலை மிரட்டல் செயல்படுத்தப்படுமானால் எனது இரத்தத்தை சால்வதோரின் உயிர்ப்புக்காகவும், மீட்புக்காகவும் கையளிக்கிறேன்' என்று சொன்னார்.

### 41. மறைசாட்சி ரொமேரோ

தனது உயிர்த்தியாகம் பற்றி குறிப்பிடுகையில் "மறைசாட்சியம்" என்பது கடவுளின் அருள். இதற்கு நான் தகுபுடையவன் அல்ல. ஆயினும் கடவுள் எனது உயிர்த்தியாகத்தை ஏற்றுக் கொள்வாரானால் எனது இரத்தம் சுதந்திரத்தின் விதையாகட்டும். நம்பிக்கையின் அடையாளமாகட்டும். கடவுள் எனது மறைசாட்சியத்தை ஏற்றுக் கொண்டால் அது மக்களின் விடுதலைக்காகவும் எதிர்கால நம்பிக்கையின் சாட்சியமாகவும் அமையட்டும்" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "என்னைக் கொல்வதில் வெற்றி கண்டால் அவர்களை நான் மன்னித்து ஆசீர்வதிப்பேன் என்று நீங்கள் நம்பலாம். ஆனால் என்னைக் கொல்பவர்கள் அவர்களது நேரத்தை விரயம் செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஓர் ஆயர் சாகலாம். ஆனால் கடவுளின் திருச்சபை அதாவது இறைமக்கள் கூட்டம் என்றும் அழிவதில்லை" என்றார்.

ஏனென்றால் ரொமேரோவின் வாழ்வில் அடக்கம் என்பது அன்றாட நிகழ்வானது. ரொமேரோவுக்கு நெருக்கமான ஒருவர் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டார். நாட்டின் விடுதலைக்காக கொல்லப்பட்ட ஒவ்வொரு சகோதரனுக்கும் சகோதரிக்கும் அஞ்சலி செலுத்துவது தனது கடமை என ரொமேரோ கருதினார்.

எனவே தனது உயிர்த்தியாகம் குறித்து அவர் தினமும் சிந்தித்தார் என்றே சொல்ல வேண்டும். தனது குருக்கள் கொல்லப்பட்ட போது கண்ணீர் சிந்தினார். தன்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்பது அவருக்கு மிகுந்த மன அழுத்தத்தைக் கொடுத்தது.

அல்போன்சா நவாரோ 11 மே 1977, எர்னஸ்டோ பரேயா 28 நவம்பர் 1978, அக்டேவியோ ஆர்டிஸ் 20 ஜனவரி 1979, ரபேல் பலேசியோஸ் 20 ஜீன் 1979, நெப்போலியன் மாசியஸ் 4 ஆகஸ்ட் 1979 என மறைசாட்சிய குருக்களின் பட்டியலும் நீண்டது.

**நாம் வேலையாட்கள், தலைமைப் பொறியாளர் அல்ல.**
**நாம் பணியாளர்கள், மெசியாக்கள் அல்ல.**
**நாம் எதிர்காலத்தின் இறைவாக்கினர்கள்,**
**இக்கால இறைவாக்கினர்கள் அல்ல.**

- ரொமேரோ

தொடரும்.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தாகமாய் இருக்கிறது" யோவான் 19:28

இயேசுகிறிஸ்து சிலுவையில் உதிர்த்த வார்த்தைகளாக ஏழு வசனங்களை நான்கு நற்செய்தியாளர்களும் பதிவு செய்துள்ளார்கள். அவற்றுள் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகளுள் ஒன்று "தாகமாய் இருக்கிறது" என்பதாகும்.

**நீரின் (தண்ணீரின்) முக்கியத்துவம்**

தாகம் அதன் பொருளினை அறிய முற்படுகையில் உடலில் களைப்பு, சோர்வு ஏற்படுகின்ற போது தாகம் ஏற்படுகின்றது. தாகத்தினை தீர்த்துக் கொள்வதற்காக தண்ணீரினை பருகுகின்றோம். அதனால் புதுத்தென்பும், புத்தெழுச்சியும் பெறுகின்றோம். தமிழர்களது பாரம்பரிய பண்பானது வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களுக்கு முதலில் குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பதாகும். தண்ணீர் மனித வாழ்வோடு இரண்டறக் கலந்த அன்றாடப் பாவனைப் பொருளாகும்.

"நீர்இன்று அமையாது உலகு" என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வள்ளுவப் பெருந்தகையும், "மாமழைப் போற்றதும் மாமழைப் போற்றுவதும்" என இளங்கோ அடிகளும், "வாழ உலகினில் பெய்திடாய்" என ஆண்டாளும் நீரின் அவசியத்தைக்குறித்து புராண காலங்களிலேயே எழுதி விட்டார்கள். நமது உடலானது 70% நீரால் ஆனாது. உணவின்றி நீண்ட நாட்கள் உயிர் கழித்துவிட முடியும். ஆயினும் நீரின்றி மூன்று நாட்களுக்கு அல்லது எழுபத்திரெண்டு மணி நேரத்திற்கு மேல் நம்மால் உயிர்வாழ முடியாது. பிரபஞ்சத்தின் மூன்றில் இரண்டு பகுதிகள் நீரினால் நிரப்பட்டுள்ளதன் வாயிலாக அதுவே வாழ்வு உருவாதற்கான ஆதாரமாகவுள்ளது என்பது நிதர்சனமாகின்றது. தமிழர் வகுத்துள்ள பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்பனவற்றுள் நீரும் அடங்கும். உலகின் பிரதான நாகரிகங்கள் எல்லாம் நீர் நிலைகளை அண்டியே ஆரம்பிக்கப்பட்டன என்பது நாமறிந்த உண்மை. சிந்துவெளி நாகரிகம் இந்து நதிக்கரையிலும், மொசப்பத்தோமிய நாகரிகம் யூப்பிரதீஸ் - தைகிறீஸ் நதிக்கரையிலும், எகிப்திய நாகரிகம் நைல் நதிக்கரையிலும், சீன நாகரிகம் குவாங்கோ நதிக்கரையிலும் ஆரம்பிக்கப்பட்டன.

**நீர் குறித்த உலகளாவிய சிக்கல்**

ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் நீரின் அவசியமும், அதன் மகத்துவமும் சரியாக உணரப்படவில்லை என்பது வேதனையான ஓர் விடயமாகும். மூன்றாவது உலகப்போர் உலகினில் உண்டாகுமெனில் அது நிச்சயமாக சுத்தமான, பாதுகாப்பான, தரமான குடிதண்ணீர் குறித்த பிரச்சனையாக உருவெடுக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அந்தளவிற்கு இன்று தண்ணீர் குறித்த சிக்கல் பூதாகரமாக உலகெங்கும் உருவெடுத்துள்ளது. இற்றைக்கு முப்பத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்னதாக குடிநீர் பிரச்சனையை மையப்படுத்திய இயக்குனர் இமயம் கே. பாலச்சந்தர் அவர்களால் இயக்கப்பட்டு "தண்ணீர் தண்ணீர்" என்கின்ற தமிழ்த் திரைப்படம் 1981ஆம் ஆண்டில் வெளியானது. அத்திரைப்படத்தின் கருப்பொருளாக இந்தியாவின் தமிழ்நாட்டின் ஆண்டிப்பட்டி, கோவில்பட்டி கிராமத்திலுள்ள குடிநீர் பிரச்சனையும், அதனோடிணைந்த அரசியல் உலகும் அமைந்திருந்தது. இக்கதையினை கோமல் சுவாமிநாதன் அவர்கள் எழுதியிருந்தார்கள். இத்திரைப்படம் இரண்டு தேசிய விருதுகளையும், இரண்டு பிலிம்பெயர் (film fare) விருதினையும் பெற்றிருந்தது. அதுமட்டுமல்லாது இந்தியாவில் இதுவரை சகல மொழிகளிலும் வெளிவந்த தலைசிறந்த 100 திரைப்படங்களுள் ஒன்றாக பட்டியல் இடப்பட்டுள்ளது.

**நீர்ப் பாதுகாப்பின் தேவை**

தண்ணீர் தேவையென்பது வாழ்விருந்து பிரிக்கமுடியாததும், அத்தியாவசியமானதாகும். ஆயினும் உயிர் ஆதாயமாகிய இத்தண்ணீர் இன்று தனியார் சொத்தாக மாறி சர்வதேச சந்தையில் விற்கப்படும் விற்பனைப் பொருளாகிவிட்டது. அதனால் நாளாந்தம் நல்ல குடிநீருக்காக ஏங்கும் மக்களினம் உலகில் அதிகரித்த வண்ணமேயுள்ளது. இத்தகைய பின்னணியில் உலகில் மனிதர்களும், கால்நடைகளும், தாவரங்களும் உயிர் வாழ்வதற்கு மனிதர்கள் மத்தியில் தண்ணீர் குறித்ததான உயர்ந்த சிந்தனையும், செயற்பாடும் தேவைப்படுவது காலத்தின் கட்டாயமாகும். காற்றுக்கு அடுத்த நிலையில் உடலுக்கு மிகவும் அவசியமானது நீராகும். இத்தகைய நீர் ஆதாரத்தை பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டயமாகும்.

உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களுக்கு குடிப்பதற்கு தேவையான சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் என்பது எட்டாக்கனியாகி விட்டது. பாதுகாப்பான குடிநீரினை வழங்குவது என்பது மிகப்பெரிய அச்சறுத்தலாக மாறிவிட்டது. உலகளாவிய மக்கட்தொகை பெருக்கத்தின் காரணமாகவும், சமூகத்தின் நாகரீகப் போக்கின் காரணமாகவும் தண்ணீரானது இன்று அரிய பொருளாக மாறிக்கொண்டு வருகின்றது. இன்னுமொரு பக்கத்தில் வான்மழை பொய்த்து விட்டதால் கொடிய, நீண்ட வரட்சி உலகின் பல பாகங்களிலும் தலைவிரித்தாடுகின்றது. தண்ணீரின் தேவையானது முன்னரைக் காட்டிலும் குறைந்து கொண்டு வருவதனாலும், இன்னும் சொல்லப்போனால் இன்றைய தனியார் மயமாக்கலின் பயனாகக் சூறையாடப்படுவதனாலும் தண்ணீர் பற்றாக்குறை நாளாந்தம் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

உலகிலுள்ள தண்ணீரில் வெறும் மூன்று விழுக்காடு மாத்திரமே பாவனைக்கு உகந்ததாக உள்ளது. அதிலும் இரண்டு விழுக்காடு தண்ணீரானது உறைந்த பனிக்கட்டியாக உள்ளதால் வெறும் ஒரு விழுக்காடு மாத்திரமே மனித பாவனைக்கு பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் தண்ணீரை மிகவும் கவனமாகவும், சிக்கனமாகவும் கையாள வேண்டிய தேவை மானிட சமூகத்திற்கு உள்ளது. உலகிலுள்ள அனைத்து மாந்தருக்கும், உயிர்வாழ் உயிரினங்கள் அனைத்திற்கும் தண்ணீரின் தேவையுள்ளது. இதிலே யாரையும் புறக்கணித்தோ அல்லது விலக்கியோ செயற்பட முடியாது. ஏனென்றால் அது அவர்களது உரிமையாகும். இதனை திருத்தந்தை பிரான்சிஸ்: ?மனித வாழ்வுக்கு தண்ணீர் அடிப்படையானது என்பதாலும், பிற மனித உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஒரு நிபந்தனை அது என்பதாலும், பாதுகாப்பான குடிநீருக்கான வாய்ப்பு ஓர் அடிப்படையான சர்வதேச மனித உரிமை ஆகும்? என்கிறார் (இறைவா உமக்கே புகழ் - எண். 30).

தண்ணீர் தட்டுப்பாடு குறித்து "உடனடிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படா விட்டால், மிகக் கொடிய தண்ணீர் குறைபாடு இன்னும் சில பத்தாண்டுகளில் ஏற்படலாம் என்று பல ஆய்வுகள் எச்சரித்துள்ளன" (இறைவா உமக்கே புகழ் - எண். 31). இதனைக் கருத்திற் கொண்டு போர்க்கால அடிப்படையில் தண்ணீர் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் தாங்களாகவே முன்வந்து தண்ணீர் குறித்த பயன்பாட்டினை ஏற்கும் நிலை உருவாக வேண்டும். நீர் ஆதாரங்களை பெருக்கும் வண்ணம் வீதியெங்கும், மலை முகடுகளிலும், தரிசு நிலங்களிலும் மரநடுகைத் திட்டம் ஆதரித்து ஊக்குவிப்பட வேண்டும். தண்ணீர் குறித்த சட்டங்கள் கடுமையாக்கப்படுவதுடன், அவற்றை அமுலாக்கம் செய்வதில் அரச நிறுவனங்கள் முன்னின்று உழைக்க வேண்டும். மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் சரியான முறையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். குளங்கள், கால்வாய்கள், சதுப்பு நிலங்கள் இன்னும் மழைநீர் தேங்கும் இடங்கள் யாவும் சரியான முறையில் பேணப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

**விவிலியப் பார்வையில் தண்ணீர்**

தண்ணீரைக் குறித்த எழுநூறுக்கு மேற்பட்ட தரவுகள் விவிலியப் புத்தகத்தினுள் காணப்படுகின்றன. வெவ்வேறு இடங்களில் தரப்பட்டுள்ள குறிப்பானது தண்ணீரைக்குறித்த புதிய பார்வையினையும், சிந்தனையையும் நமக்குத் தருகின்றது. விவிலியத்தின் முதற் புத்தகமாகிய தொடக்கநூலின் முதற் பிரிவில் காணப்படுகின்ற முதலாவது படைப்புக் கதையினூடாக படைக்கப்பட்ட படைப்புக்கள் யாவும் தண்ணீரிலிருந்து தோற்றம் பெற்றன என்பதனை கற்பிப்பதுடன், தொடக்கநூல் 1: 20-21 பகுதியினூடாக திரளான உயிரினங்களை நீரினைக்கொண்டு தோற்றுவிப்பதனையும் காண்கின்றோம். அவ்வாறே தொடக்கநூல் இரண்டாம் அத்தியாயத்திலுள்ள படைப்புக் கதையில் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தன் வாயிலாக உயிரினங்கள் தோற்றம் பெற்றன என்பதனைப் பறைசாற்றுகின்றது (காண்க. தொடநூல் 2:6).

தொடரும்.............

அருட்பணி. அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## தாயின் ஏக்கம்



கண்ணின் மணிபோல் காத்த மைந்தனை
கரங்களை விரித்தவராய் கள்வர்கள் நடுவில்
கழுமரத்தில் மூன்று ஆணிகளில் தொங்கிய போது அன்று
கண்ணீர் விட்டு கதறி அழுதாயோ தாயே

கடல் கடந்து சென்ற பிள்ளைகளுக்காக
காட்டி கொடுத்து சிறையில் வாடும் பிள்ளைகளுக்காக
கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக
கல்லறைக்குள் புதைத்த பிள்ளைகளுக்காக - இன்று
கண்ணீர் விட்டு கதறி அழுகிறோம் தாயே

அன்று உமது கண்ணீருக்கு
விடிவு கிடைத்தது முடிவும் கிடைத்தது
இன்று எமது கண்ணீருக்கு
விடிவு கிடைக்குமா? அல்லது முடிவுதான் கிடைக்குமா?
பதில் கூறும் தாயே!

## தவக்காலம்



தவம் செய்யும் காலம்
செபம் செய்யும் காலம்
அன்பை பகிரும் காலம்
ஆசையை அடக்கும் காலம்

பரிசுத்தமாக நடக்கும் காலம்
பாதகருக்காய் ஜெபிக்கும் காலம்
தருமம் செய்யும் காலம்
கருமத்தை விட்டொழிக்கும் காலம்

புண்ணியம் தேடும் காலம்
புறம் கூறுதலை நிறுத்தும் காலம்
பாவ அறிக்கை செய்யும் காலம்
பாவியை மன்னிக்கும் காலம்

ஒறுத்தல் புரியும் காலம்
ஒற்றுமையைப் பேணும் காலம்
போதையை வெறுக்கும் காலம்
போதனைக்கு செவிமடுக்கும் காலம்

சிலுவை பாதை புரியும் காலம்
சிற்றின்பத்தை விலக்கும் காலம்
மொத்தத்தில் கடவுளின் அன்பை
சுவைக்கும் காலம்
இதுவே தவக்காலம்

ஆக்கம் : பிலிப் நளினா
இல : 925/1,
புனித அந்தோனியார் வீதி,
செல்வநாயகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியப்புக்குரிய பல பற்றிய ஓர் கண்ணோட்டம்

காலங்கள் பல கடந்து சென்றாலும் இறைவனின் வார்த்தைகள் உயிருள்ளவையாக உள்ளன. நற்செய்தி அறிவிக்கும் பணி வெறுமனே போதனையாகவும் சுருவேடுகளாயும் இருந்த காலத்தில் இருந்து பரிணாம வளர்ச்சியடைந்து இன்று இலத்திரனியல் சாதனங்களினூடாக இப்பணி துரிதமாகியுள்ளது. எனவே 1962ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கமானது பல எதிர்ப்புக்கள், கேள்விகளுக்கு மத்தியில் "சமூகத்தொடர்பு கருவிகள்" பற்றி விவாதிக்கப்பட்டது. பிரான்சியப் புரட்சி, கைத்தொழில் புரட்சி மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆகிய வரலாற்று நிகழ்வுகளினால் ஏற்பட்ட தாக்கத்தின் பின் திருச்சங்கத் தந்தையர் சமூகத்தொடர்பு கருவிகளின் அவசியத்தினை திருஅவையில் உணர்ந்தார்கள். பிறரது அச்சு வெளியீடுகளும் வானொலி. தொலைக்காட்சி, நிகழ்ச்சிகளும், திரைப்படங்களும் மக்களுக்குத் துன்மாதிரிகையாக அமைந்து, தீமை விளைவிக்கும் கருவிகளாக இருந்துவிடக் கூடாது எனக் கத்தோலிக்க தலைவர்களும், வழிகாட்டிகளும் கவலைப்பட்ட காலம் அது. எனவெ இக்கலந்துரையாடல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் 1960 பேர் ஆதரவாகவும் 164பேர் எதிராகவும் வாக்களிக்கப்பட்டு 1963ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம்திகதி இரண்டாம் அமர்வில் "**வியப்புக்குரிய பல**" (Inter Mirifica) எனும் பெயரில் ஆவணமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ் ஏடு விவாதிக்கப்பட்ட போது பலர் அதைப்பற்றி பல குறைகளை எடுத்துரைத்தார்கள். இது ஒரு பிரசங்கம் போல இருக்கிறதேயன்றி இத்துறை பற்றிய முழு அறிவுடன் எழுதப்பெற்றதாக இல்லை என்று பலர் விமர்சித்தனர். எனினும் திருச்சங்கம் காலத்தின் அவசியத்தை அறிந்து அதிகார பூர்வமாக இவ் ஏட்டினை வெளியிட்டது. இதன் மூலம் நற்செய்திப் பணியிலும் சமூக விழுமிய மனிதப் பண்புகளிலும் புதிய மாற்றத்தை திருஅவை கொணர்ந்தது. இங்கு என்னுடைய பணி என்னவெனில், இறைஅடியாருக்கு அடியார் ஆயர் பவுல் திருச்சங்கத் தந்தையரோடு இணைந்து நினைவில் என்றும் நிலைக்குமாறு அருளிய விதித்தொகுப்பு பற்றிய ஒரு சிறிய கண்ணோட்டம் மாத்திரமே.

திருஅவை, அச்சு வெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, இணையம் ஆகியவற்றை சமூகத் தொடர்பு கருவிகள் என அடையாளம் கண்டுள்ளது. மனித அறிவினாலும் கடவுளின் உதவியோடு இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள இத் தொடர்புக் கருவிகள், மனித உள்ளத்தோடு நெருங்கிய தொடர்புள்ளவை எனவும், செய்திகளையும், கருத்துக்களையும் வழிமுறைகளையும் மிக எளிதாக மக்களிடையே பரப்பக்கூடிய புதிய வழிகாட்டிகள் என தாய்த் திருஅவை ஏற்றுத் தனிப்பட்ட அக்கறையோடு கவனித்து வருகின்றது. மனிதருக்கு ஓய்வு அளிக்கவும் உள்ளத்தைப் பண்படுத்தவும் உதவுவதோடு இறையாட்சியைப் பரப்பி நிலைநிறுத்தவும் இக்கருவிகள் உறுதுணையாகின்றன என திருச்சங்கம் ஏற்றுக் கொள்கின்றது. எனினும் இக்கருவிகளைத் தவறாகப் பயன்படுத்துவதால் மனித சமுதாயத்துக்கு பன்முறையும் ஏற்பட்டுள்ள அழிவை எண்ணி அன்னைக்குரிய பரிவினால் திருஅவை இவ் அறிவுறுத்தல்களையும் எச்சரிக்கைகளையும் கொணர்கின்றது.

செய்தி திரட்டுவதற்கும் அறிவதற்கும் மனிதருக்கு உரிமை உண்டு. தனி மனிதர்கள் என்னும் முறையிலோ, சமூக உறுப்பினர் என்னும் முறையிலோ தம்மோடு தொடர்புள்ளவை பற்றிய செய்திகளைத் தத்தம் நிலைமைக்கு ஏற்றவாறு அறிகின்ற உரிமை சமுதாயத்திற்கு உரித்தானது. திருஅவை இவ் உரிமைகளை நிராகரிப்பதில்லை. எந்த ஒரு நிலையிலும் தொடர்புக் கருவிகள் தீயவை என திருஅவையின் படிப்பினை அமையவில்லை. ஆனால் செய்தி திரட்டுவதிலும் அறிவதிலும் பரப்புவதிலும் ஒரு சிக்கல் இருப்பதனை அறிந்துள்ளது. என்னவெனில், அறிவிக்கப்படும் பொருளைப் பொறுத்த மட்டில் செய்தி எப்பொழுதும் உண்மையானதாகவும் நீதியினின்றும் அன்பினின்றும் வழுவாத வகையில் முழுமையானதாகவும் சிலவேளைகளில் காணப்படுவதில்லை. எனவே செய்தி அறிவிக்கும் முறை நேர்மையானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். அதாவது செய்தியைத் திரட்டுவதிலும் பரப்புவதிலும் ஒழுக்க நெறிகளையும் தனி மனிதரின் முறையான உரிமைகளையும் மாண்பையும் நுணுக்கமாகக் காக்க வேண்டும்.

எனவே இதன் பின்னனியில் திருச்சங்கத்தினர் தொடர்புக் கருவிகள் மட்டில் உள்ள கடமைகளை இவ்வாறு முன்வைக்கின்றன.


**01. வாசிப்போர், பார்ப்போர், கேட்போர் மட்டில் உள்ள கடமைகள்**

- நற்பண்பிலும், அறிவிலும், கலையிலும் சிறந்தவற்றை எல்லா விதத்திலும் ஆதரிக்க வேண்டும்.
- தங்கள் அருள்வாழ்விற்கு ஊறு விளைவிக்க காரணமாகவோ, வாய்ப்பாகவோ இருப்பவற்றை தவிர்க்க வேண்டும்.
- தவறான எடுத்துக் காட்டால் பிறருக்கு தீங்கு விளைவிப்பவற்றை அகற்றிவிட வேண்டும்.
- இக் கருவிகளைப் பயன்படுத்தும் போது இக்கருவிகளை இலாப நோக்கோடு பயன்படுவோருக்கு பண உதவி செய்தலே எனஅறிந்திருக்க வேண்டும்.
- இக்கருவிகளைப் பயன்படுத்தும் போது ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**தொடரும்................**

**அருட்சகோதரர். பே. எமர்சன் றாகல்,**
**இறையியல் பீடம்,**
**கண்டி தேசிய குருமடம்**

# படித்ததில் பிடித்தது




அருட்பணியாளர் . T. கிங்ஸ்லி றொபட்

## இருளாட்சி

சுடர்விட்டது ஒளி.
சற்றுத் தூரத்தில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தது இருள்.
'ஒளியே...!
உன்னால் என்ன பயன்?'

ஒளியை வம்புக்கு இழுத்தது:
'எனக்குத்தான் மனிதர்கள் அதிகம் பயப்படுகிறார்கள்.
என் ஆட்சியில் தான் அக்கிரமங்கள் அதிகம் ஆக்கிரமிக்கும்.
உன்னால் என்ன செய்ய முடியும்?
அடிப்படையில் மனிதர்கள் என்னைத்தானே மனதில் வைத்துப் போற்றுகிறார்கள்.
உன்னையா போற்றுகிறார்கள்...?'

தொடர்ந்து சவால் விட்டது இருள்:

'நான் இயேசுவையே சிலுவையில் அறைந்தவனல்லவா?
நான் இல்லாவிட்டால் அது நடந்திருக்குமா?
நீ எங்கும் இருப்பதாகச் சொல்கிறார்களே...
சிலுவையில் அவர் தொங்கிய போது...
நீ எங்கே போயிருந்தாய்?
என் இருளாட்சிக்கு முன்னால்...
உன் அருளாட்சி எம்மாத்திரம்?'

அமைதியாய்ச் சொன்னது ஒளி:
நான் வந்தாலே
இருக்கும் இடம் தெரியாமல் ஓடிப் போகும் இருளே...!
அழிப்பதில் இவ்வளவு ஆனந்தம் கொள்ளுகிறாயே...
உன்னால் ஏதாவது ஒன்றை ஆக்க முடியுமா?'
எரியும் சுடரை உற்றுப் பார்...!
அந்தச் சுடரொளிக்குள்ளே...
சின்ன இருட்டு ஒளிந்திருக்கும்.
அதாவது,
ஒளிக்குள்ளே...
சின்ன இருட்டு உண்டு.
ஆனால்
இருளுக்குள்ளே...
சின்ன ஒளி என்று ஏதுமில்லை.

# குட்டிக்கதை ஒன்று



Fr. N.C

ஒரு ஊரிலே மிகவும் வறுமைக்குள் வாழும் ஒருவர் வீதி ஓரத்திலிருந்து கையை நீட்டிக் கிடைப்பதைக் கொண்டு பசியைத் தீர்ப்பார், நடக்க முடியாத ஊனமுற்றவர்.

உறவுகளென்று யாருமே இல்லை. இரவில் கூட சந்தையிலே ஒரு ஓரமாகப் படுப்பார். பல நேரங்களில் ஒரு சிலர் இங்கு வருவதுண்டு. ஆனால் அவர் அங்கு வந்து போகின்றவர்களைக் கண்டு கொள்வதில்லை. காரணம் அவர்கள் செய்வதை அவர் மற்றவர்களிடம் கூறினால் தனக்குக் கிடைப்பது கூட கிடைக்காமல் போகும் என்கிற பயமே அவரைப் பேச விடாமல் தடுத்தது.

அதனால் தான் கண்ணிருந்தும் குருடனாக காதிருந்தும் செவிடனாக வாயிருந்தும் ஊமையாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தார்.

மற்றவர்களின் தீய செயல்களை மறைப்பதற்காக அவர் தன்னையே மறைத்து வாழ்வது தெரிகின்றதல்லவா.



# ஆழ்ந்த அனுதாபங்கள்




அருட்பணியாளர். பிரட்லி றொசைரோ அவர்களின் தந்தை ஜோசப் றொசைரோ அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற திருமலைத்தீபம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய வாசிப்பு

| வைகாசி 2019 | | |
|---|---|---|
| விடுதலைப் பயணம் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 21:28-36 | 23:1-36 | 98:1-9 |
| 02) 22:1-15 | 24:1-2 | 100:1-5 |
| 03) 22:16-31 | 24:3-14 | 101:1-8 |
| 04) 23:1-9 | 24:15-28 | 102:1-28 |
| 05) 23:10-29 | 24:29-31 | 103:1-22 |
| 06) 23:20-33 | 24:32-35 | 104:1-23 |
| 07) 24:1-11 | 24:36-44 | 104:24-35 |
| 08) 24:12-18 | 24:45-51 | 105:1-15 |
| 09) 25:1-9 | 25:1-13 | 105:16-36 |
| 10) 25:10-22 | 25:14-30 | 105:37-45 |
| 11) 25:23-30 | 25:31-46 | 106:1-12 |
| 12) 25:31-39 | 26:1-5 | 106:13-31 |
| 13) 26:1-37 | 26:6-13 | 106:32-48 |
| 14) 27:1-8 | 26:14-16 | 107:1-46 |
| 15) 27:9-21 | 26:17-19 | 108:1-13 |
| 16) 28:1-14 | 26:20-25 | 109:1-31 |
| 17) 28:15-30 | 26:26-30 | 110:1-7 |
| 18) 29:1-37 | 26:31-35 | 111:1-10 |
| 19) 29:38-46 | 26:36-46 | 112:1-10 |
| 20) 30:1-16 | 26:47-56 | 113:1-9 |
| 21) 30:17-21 | 26:57-68 | 114:1-8 |
| 22) 30:22-38 | 26:69-75 | 115:1-8 |
| 23) 31:1-11 | 27:1-2 | 115:9-18 |
| 24) 31:12-18 | 27:3-10 | 116:1-11 |
| 25) 32:1-35 | 27:11-14 | 116:12-19 |
| 26) 33:1-13 | 27:15-26 | 117:1-2 |
| 27) 33:12-23 | 27:27-31 | 118:1-8 |
| 28) 34:1-9 | 27:32-44 | 118:9-16 |
| 29) 34:10-28 | 27:45-56 | 118:17-24 |
| 30) 34:29-35 | 27:57-61 | 118:25-29 |
| 31) 35:1-9 | 27:62-66 | 119:1-8 |




| ஆனி 2019 | | |
|---|---|---|
| விடுதலைப் பயணம் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 35:10-19 | 28:1-10 | 119:9-16 |
| 02) 35:20-29 | 28:11-15 | 119:17-24 |
| 03) 35:30-36:7 | 28:16-20 | 119:25-32 |
| விடுதலைப் பயணம் | மாற்கு | திருப்பாடல் |
| 04) 36:8-38 | 1:1-8 | 119:33-40 |
| 05) 37:1-9 | 1:9-11 | 119:41-48 |
| 06) 37:10-24 | 1:12-13 | 119:49-56 |
| 07) 37:25-29 | 1:14-16 | 119:57-64 |
| 08) 38:1-8 | 1:16-20 | 119:65-72 |
| 09) 38:9-20 | 1:21-28 | 119:73-80 |
| 10) 38:21-31 | 1:29-34 | 119:81-88 |
| 11) 39:1-7 | 1:35-39 | 119:89-96 |
| 12) 39:8-21 | 1:40-45 | 119:97-104 |
| 13) 39:22-31 | 2:1-12 | 119:105-112 |
| 14) 39:32-43 | 2:13-17 | 119:113-120 |
| 15) 40:1-33 | 2:18-22 | 119:121-128 |
| 16) 40:34-38 | 2:23-28 | 119:129-136 |
| லேவியர் | மாற்கு | திருப்பாடல் |
| 17) 1:1-17 | 3:1-6 | 119:137-144 |
| 18) 2:1-16 | 3:7-12 | 119:145-152 |
| 19) 3:1-17 | 3:13-19 | 119:153-160 |
| 20) 4:1-35 | 3:20-30 | 119:161-168 |
| 21) 5:1-13 | 3:31-35 | 119:169-176 |
| 22) 5:14-6:7 | 4:1-9 | 120:1-7 |
| 23) 6:8-23 | 4:10-12 | 121:1-8 |
| 24) 6:24-7:10 | 4:13-20 | 122:1-9 |
| 25) 7:11-38 | 4:21-25 | 123:1-4 |
| 26) 8:1-36 | 4:26-29 | 124:1-8 |
| 27) 9:1-24 | 4:30-32 | 125:1-5 |
| 28) 10:1-7 | 4:33-34 | 126:1-6 |
| 29) 10:8-20 | 4:35-41 | 127:1-5 |
| 30) 11:1-47 | 5:1-20 | 128:1-6 |

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



## 3. விடாமுயற்சியும் மனவலிமையும்

எடுத்த முயற்சியை இடையிலே நிறுத்தி விடாது தொடர்ந்து செய்து முடிப்பதே விடாமுயற்சி எனப்படும்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

என்று வள்ளுவர் கூறினார்.

"விடாமுயற்சியோடு செயற்பட்டவனது வாழ்வில் செல்வம் பெருகும்"

என்றார் செனேகா.

"தொடங்கிய செயலைப் பயன்காணும் வரைவிடவே கூடாது.
அதுவேவிடாமுற்சி"

என்கிறார் ஷேக்ஸ்பியர்.

"எதனையும் நான் திடீரென்று கண்டு பிடிக்கவில்லை.
பல்லாண்டுகள் ஊண், உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது
எனது விடாமுயற்சியேதான்"

என்று தோமஸ் அல்வா எடிசன் கூறுகிறார்.

ஒரு செயல் வெற்றி பெற வேண்டுமானால் அதற்கு முயற்சி தேவை என்று உணர்த்தவே "முயற்சி திருவினையாக்கும்" என்றார் வள்ளுவர். எடுத்த செயல் மனவலிமையுடன் தொடரப்பட்டால் முயற்சியின் பயனை அடையலாம் என்பதை உணர்த்தவே "ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவையார். "முயற்சி உடையவனின் வீட்டிற்குள் வறுமை எட்டிப் பார்க்கலாம். ஆனால் உள்ளே நுழைய முடியாது" என சீன முதுமொழி கூறுகிறது.

செயலில் வெற்றி பெற்றவுடன் மனநிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. புகழும், பெருமையும் வருகிறது. விடாமுயற்சி உள்ளவனுக்குச் சோம்பல் வராது. தோல்வியைக் கண்டு துவள மாட்டான். தோல்விகள் தான் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அடிப்படை என்பதை உணர்வான்.

விடாமுயற்சியைப் பயிற்சி செய்ய ஒருவன் விரும்பினால் அதற்குத் துணை செய்யும் குண இயல்புகள் சில உண்டு. அவையாவன, தன்னம்பிக்கை, தேர்ந்தெடுக்கும் அறிவுத் தெளிவு, ஆலாசனை பெறும் தாழ்ச்சி, தீர்மானம் எடுக்கும் மனஉறுதி, காரியத்தில் கவனம் என்பனவாகும்.

முயற்சியைக் கைவிடாமல் இருக்க ஒருவனுக்கு தன்னம்பிக்கை வேண்டும். எடுத்த காரியத்தை என்னால் சாதிக்க முடியும். அதற்கு தேவையான சக்தியும் திறமையும் என்னிடம் உள்ளது என்கின்ற நம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கை இல்லையேல் தோல்வி மனப்பான்மை வந்து விடும்.

அதேபோன்று ஒருவன் ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கப் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். தன்னிடத்தில் உள்ள வசதி, வாய்ப்பு, திறமை, பொருள், கருவி, காலம், இடம் முதலியவற்றிற்குத் தகுந்தாற்போல் ஒரு வேலையைத் தெரிந்தெடுக்க வேண்டும். நாம் தொடங்கும் வேலை கடினமானதாக இருக்கலாம். ஆனால் செய்யவே முடியாததாக இருக்கக் கூடாது.

மேலும் தேர்ந்தெடுத்த வேலையைப் பற்றிய விவரங்களை அறியப் பெரியோர்களின் ஆலோசனை உதவும். கட்டிடம் கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னர் இதற்குமுன் கட்டிடம் கட்டி அனுபவம் வாய்ந்த கட்டடக் கலைஞர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றால் பல பயன்கள் கிடைக்கலாம்.

அதே போன்று தான் எடுத்துக் கொண்ட செயலின் தன்மையைத் தன் அறிவினால் புரிந்து கொண்டு அதைப் பற்றிய ஒரு முடிவு எடுக்க வேண்டும். தீர்க்கமான முடிவு எடுத்த பின்னர் எதிர்காலத் துன்பங்களைக் கற்பனை செய்து கலங்கக் கூடாது.

அதுமட்டுமன்று காரியத்தில் கவனமாகவும் இருக்க பழகவேண்டும். கவனமில்லாலமல் பாடம் கேட்பவர் தேர்வில் தோல்வி காண்பர். ஒரு குறிக்கோளை அடைய நமது அறிவு, ஆற்றல் அனைத்தையும் ஒரு குறியில் குவிப்பது தான் கவனம். முழுக் கவனத்தோடு செய்யப்படாத எந்த முயற்சியும் வெற்றி பெறாது.

விடாமுயற்சியின் பகைவர்களும் உண்டு. துன்பத்தில் துவழ்தல், எதிர்ப்புகளுக்கு அஞ்சுதல், தோல்வியில் தளர்தல் முதலியன அவற்றில் சில.

ஆகவே முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் என்று வாழப் பழகுவோம்.

தொடரும்...............

# இறை நம்பிக்கை மேலோங்க....

அருட்பணி. N. C. அருள்வரதன்

ஏனிந்த மனிதருக்குள்
எத்தனையோ வேறுபாடு
ஒற்றுமை அன்பு நட்பு
உறவொன்றுமில்லாமல்
பிளவுபட்ட வாழ்வுகளாய்
பிரிந்துதானா வாழவேண்டும்

அன்பை மறந்துவிட்டால் அதனால்
ஆவதுதான் ஒன்றுமில்லை
என்னதான் நம்மிடையே
இடைவெளிகள் இருந்தாலும்
உறவுகளை உடைக்காமல்
உணர்ந்து நாங்கள் வாழ வேண்டும்.



இறை அன்பில் நாம் வளர அங்கு
நல்வழிகள் உதயமாகும்
செல்லும் வழி நம்மை
சீரியதாய்க் கொண்டு செல்ல
குறைகளே மறைந்து போகும் எனவே
இறைவனை நம்பியே வாழ்வோமே

கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்லென்பது
பழிவாங்கும் படலங்களாகும்
மன்னிப்போம் மறப்போமென்பது
இறைவனின் குரல்வடிவமல்லவா
வேண்டாம் நமக்குள்ளே கடினங்கள்
விளையட்டும் நமக்குள் நல்லவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கின் ஆரம்பம் ~ புனித வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரம்

எமது மறைமாவட்டத்தின் 125வது யூபிலி ஆண்டை சிறப்பித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் எமது மறைமாவட்டத்திலுள்ள பங்குகள், ஆலயங்கள் தொடர்பாக குறித்த பங்குகளிலேயே பல காலமாக வசித்து வருகின்ற வயது முதிர்ந்தவர்களை சந்தித்து அவர்களுடைய அனுபவங்களையும் ஆலய உருவாக்கம், மக்களின் வாழ்நிலை, சமய கலாசார நிகழ்வுகள் மறக்க முடியாத சம்பவங்கள் என சிலவற்றை மாதாந்தம் எமது பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றோம்.

இம்முறை **செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார்** ஆலய ஆரம்ப கால மக்களின் வாழ்க்கை நிலை தொழில், வாழ்விடம் இவ்வாறாக சிலவற்றை தெரிந்து கொண்டு உங்களுக்கு தெரியப்படுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

முதலில் அநேகர் புனித அந்தோனியரைப் பற்றி தெரிந்துள்ளதைப் போன்று புனித வனத்து அந்தோனியாரைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. இருவரும் ஒருவரே என எண்ணுகிறவர்களும் உண்டு. புனித வனத்து அந்தோனியார் ஆலயம் அநேக இடங்களில் அதிகமாக காணப்படுவதில்லை. எமது நாட்டில் ஓரிரு ஆலயங்கள் காணப்படலாம் என எண்ணுகின்றேன்.


ஆதலால் புனித வனத்து அந்தோனியாரைப் பற்றிய சிறு அறிமுகம் ஒன்றைக் கொடுப்பது சிறப்பானது என எண்ணுகின்றேன். வனத்து அந்தோனியார் கி. பி 251இல் கிரேட் ஹெரரிகளியோ போலிஸ் (Grate Herocleopolis) என்ற இடத்தில் பிறந்தார். கி. பி 356இல் இறைவனடி சேர்ந்தர். கத்தோலிக்க மற்றும் கீழைத்தேய திருச்சபைகளில் இவரது திருநாள் தை மாதம் 17ம் திகதி கொண்டாடப்படுகின்றது. வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த இவர் தனது சொத்துக்கள் அனைத்தையும் ஏழைகளுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்து விட்டு தனது 20வது வயதில் துறவற வாழ்வை ஆரம்பித்தார்.

வனத்திலும் குகைகளிலும் கல்லறைகளிலும் தனது வாழ்நாளை செபத்திலும் தவத்திலும் கழித்த இவர் பல சோதனைகளைக் கடந்து பல புதுமைகளைச் செய்து வந்துள்ளார் தூய வனத்து அந்தோனியார் தொற்று நோயிலிருந்தும் சிறப்பாக தோல் நோயிலிருந்தும் பாதுகாக்கின்ற புனிதராக கருதப்படுகின்றார். தற்போது இவ் ஆலயத்தில் பல புதுமைகள் இடம்பெறுவதாக அறிந்து அவற்றோடு இவ் ஆலயம் தொடர்பாகவும் இவ் ஊர் தொடர்பாகவும் தெரிந்து கொள்ள அங்கு சென்றேன்.

1960ம் ஆண்டு தொடக்கம் செல்வநாயகபுரத்தில் குடியேறி 52 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்ற தற்போது 84 வயதான ஆலயத்திற்கு அருகாமையில் வசித்து வருகின்ற மைக்கல் மரியதாஸ் அவர்களையும் சிறுபராயம் தொடக்கம் இன்ற வரை வசித்து வருகின்ற திரு டேவிட் அன்ரனிபிலிப் அவர்களையும் சந்தித்து கதைத்தேன். செல்வநாயகபுரம் எனும் பெயர் எப்படி வந்தது எனக் கேட்டேன், தமிழர் விடுதலைக்காய் அரசியல் ரீதியாகப் போராடிய தமிழர்களால் தந்தை என அழைக்கப்பட்ட செல்வநாயகம் அவர்களின் நினைவாக செல்வநாயகபுரம் என அழைக்கப்பட்டது. 1960, 1961ம் ஆண்டு காலப் பகுதியில் தொழிலதிபர் A.S.M. ஜெகநாதன் அவர்களால் இலங்கை கண்ணாடி தொழிற்சாலை (Lanka Glass Factory) உருவாக்கப்பட்டது. 1000இற்கும் அதிகமானோர் வேலை செய்தனர். இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (Glass விளக்கு சிமிழிகள் போன்ற) நாடு பூராகவும் விநியோகிக்கப்பட்டது. இவரின் உதவியுடன் தான் ஆரம்பத்தில் ஆலயம் அமைக்கப்பட்டது. அத்துடன் தன்னிடம் இருந்த இயந்திரத்தைக் கொண்டு நிலத்தை சமப்படுத்தி இம்மக்களின் கல்விக்காக ஓர் பாடசாலையும் அமைத்துத் தந்தார். அதன் பெயர் "தமிழ் அரசினர் கலவன் பாடசாலை" என்பதாகும். எனினும் தற்போது பல்வேறு காரணங்களால் செல்வநாயகபுரம் இந்து மகளிர் வித்தியாலயம் என அழைக்கப்படுகின்றது.

இங்கு பெரிய அரச பண்ணை ஒன்றும் அதன் அருகில் அழகான குளம் ஒன்றும் உள்ளது. அக்காலப் பகுதியில் அக் கண்ணாடித் தொழிற்சாலைக்கும் அரச பண்ணைக்கும் இடைப்பட்ட பகுதியில் அரச திணைக்களங்களில் வேலை செய்த Peonமார்களின் குடும்பங்கள் அரசினால் குடியேற்றப்பட்டார்கள். பொதுமக்களுக்கும் காணிகள் வழங்கப்படும் எனக் கூறப்பட்ட போதும் அது வழங்கப்படாமையால் மக்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தாங்கள் விரும்பிய இடங்களில் குடியேறினார்கள். தற்போது இக் காணிகளுக்கு அரச உறுதிகள் பெறப்பட்டுள்ளன. அக்காலப் பகுதியில் 30இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க குடும்பங்கள் வசித்து வந்தனர். எமக்கு ஆலயமாக சின்னக்கடை குவாடலூப்பே மாதா ஆலயம் காணப்பட்டது. பங்குத் தந்தையாக Fr. ஜோன் பீற்றர் இருந்தார். இங்கு ஒரு விசேடம், ஆலயமும் ஆலயக் காணியும் மக்களின் முழு முயற்சியால் தான் உருவாக்கப்பட்டன.

எமது பகுதியிலும் ஓர் ஆலயத்தை அமைக்க வேண்டும் என இப்பகுதியில் குடியேறிய இருதயம், ஆசிர்வாதம், பத்தி ரோஸ், ராயூ, டேவிட் அன்டனி, பாத்லெட், அந்தோனி போன்றவர்களுடன் அனைவரும் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டு தற்போது ஆலயம் காணப்படுகின்ற இடத்தை பிடித்து ஓலைகளைக் கொண்டு கொட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதுடன் மிக்கேல் என்பவரால் சிலுவை செய்யப்பட்டு மலை உச்சியில் நடப்பட்டது. அச்சிலுவை மரத்தை இன்றும் காணலாம். கொடி மரத்திற்கான கம்பி நீதிமன்றில் வேலை செய்த டேவிட் அன்டனி அவர்களால் Tenterஇல் வாங்கப்பட்டு ஜெகநாதன் நிறுவனத்தில் வேலை செய்தவர்களின் உதவியுடன் கொடி மரம் செய்யப்பட்டு நடப்பட்டது.








முதலில் திருப்பலி நிறைவேற்ற அருட்பணியாளர்கள் யாரும் வரவில்லை. 1963 ஜீன் மாதமளவில் பதுவை அந்தோனியார் ஆலயமாக இருந்தது. இலத்தீன் மொழி தெரிந்தவர்கள் தான் திருப்பலிக்கு உதவி செய்ய முடியும். "மெயா குல்பா மெயா குல்பா மெ மாஸ்மே குல்பா" என்பதற்கு "என் ப்பாவமே என் பாவமே என் பெரும் பாவமே" என்பது தமிழ் மொழி அர்த்தமாகும். பின்னர் செவ்வாய்க் கிழமைகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியின் பின்னர் Fr. ஜோன் பீற்றர் அனைத்து இடங்களிலும் பதுவை அந்தோனியார் ஆலயம் உள்ளது. இப்பகுதி வனமாகவும் இருப்பதால் இவ் ஆலயத்தை வனத்து அந்தோனியார் ஆலாமாக உருவாக்குவோம் என்றார். 1965ம் ஆண்டு இது வனத்து அந்தோனியார் ஆலயமாக மாற்றப்பட்டது. அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டார்கள். வனத்து அந்தோனியார் ஆலய திருவிழா ஜனவரி 17 என்றாலும் 1963ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை புனித அந்தோனியார் பெருவிழா கொண்டாடப்படுகின்ற ஜீன் மாதங்களிலேயே இவ் ஆலயத்திருவிழாவும் கொண்டாடப்டுகின்றது.



இன்று வரை காணக்கூடிய வனத்து அந்தோனியாரின் சுரூபத்தை முல்லைத்தீவைச் சேர்ந்த அமிர்தநாதன் என்பவர் அங்கு சென்று "பப்பா" என்பவரின் மூலம் சிறிய வனத்து அந்தோனியார் சுரூபம் ஒன்றை செய்து கொண்டு வந்து Fr. ஜோன் பீற்றரிடம் கொடுத்து ஆசிர்வதிக்கப்பட்டு வைக்கப்பட்டது. அச்சுரூபம் மிகவும் புதுமையானது. முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களினால் இவ்விடம் ஆசிர்வதிக்கப்பட்டது.

2002ம் ஆண்டளவில் புயல் அடித்த போது ஆலாத்தில் உயரக் கூண்டில் வைக்கப்பட்டிருந்த சுரூபம் கதவு திறக்கப்பட்டு கீழே கதிரை ஒன்றில் துணி போர்த்தியவாறு இருந்தது. இதனை பலர் சென்று பார்வையிட்டனர்.

2009ம் ஆண்டு காலப் பகுதியில் ஆலய கட்டுமானப் பணியின் போது ஞாயிறு திருப்பலியின் பின்னர் 10மணியளவில் நிலத்திற்கு கொங்றீட் இடும் வேலை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்த போது தண்ணீர் பெறும் வழிகள் தடைப்பட்டு விட்டது. உயரமான பகுதி என்பதால் தண்ணீரை இலகுவாக பெற முடியாத சூழ்நிலை. என்ன செய்வதென்பது தெரியாத சூழ்நிலையில் திடீரென வானம் கறுத்து மழை பெய்தது. வெயிலுக்காகப் போடப்பட்டிருந்த "டென்ட்" இல் நீரை சேர்த்து நீர்க் கொள்கலன்கள் நிரப்பப்பட்டு இரவு 10 மணி வரை வேலை செய்து அவ்வேலைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. இது மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகும்.

2011ம் ஆண்டு Fr. கிரைட்டன் அவர்களின் காலத்தில் ஆலயத்திற்கு வருகை தந்த மக்கள் சுரூபத்திற்கு முன்பாக மெழுகுவர்த்திகளை கொழுத்தி செபித்து விட்டுச் சென்றுள்ளனர். இதனால் தீ ஆலயத்தினுள் பரவியுள்ளது. மதியம் 2.30 மணியளவில் தற்செயலாக சென்று பார்த்த போது சுரூபத்தை தவிர அவ்விடத்தில் இருந்த அனைத்தும் எரிந்து காணப்பட்டது.

ஆலயத்தை அண்டிய பகுதியில் வசிக்கின்ற கண்ணன் எனும் சிறுவன் ஒருவன் கால் வழக்கமில்லாததுடன் நன்றாக கதைக்கவோ எதையும் செய்யவோ இயலாதவராக இருந்தார். அவர் ஆலயத்திற்கு ஒருமுறை வந்த போது தாடி வைத்த ஒருவர் தன்னை துரத்தியதாகவும் அதனால் தான் எழுந்து ஓடியதாகவும் கூறியுள்ளான். தற்போது நடப்பதுடன் கதைக்கவும் நன்றாகப் பாடவும் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08ம் பக்கத் தொடர்ச்சி....... பங்கின் ஆரம்பம்

Fr. ஜோன்பிள்ளை அவர்களுடைய பணிக்காலத்தில் இந்து மத பெண்ணொருவர் சிலுவை மரத்தடியில் அழுது கொண்டு செபித்து விட்டு முழங்காலில் நடந்து ஆலயத்திற்கு சென்று தனது மகள் சுகம் பெற வேண்டுமென அழுதபடி பிரார்த்தனை செய்து விட்டு சென்றதாகவும் பின்னர் வந்து தனது மகள் சுகம் பெற்று விட்டாள் எனக் கூறியதாகவும் திருப்பலியின் போது இதனைக் குறிப்பிட்டு கூறிய அருட்தந்தை இது தான் கண்ட புதுமை எனக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண அகதிகள் இங்கு வசித்த போது (ஜெகநாதன் நிறுவனம்) அவர்கள் செல்லும் வரை ஆலயத்தை 03 முறை சுற்றி விட்டு மணல், கற்கள் என்பவற்றை எடுத்துக் கொண்டு செல்வார்கள். விசேடமாக "உடம்பில் காய் வளருதல்" எனக் கூறப்படும் நோய்க்கு விசேட குணம் கிடைப்பதாக நம்பப்படுகிறது.

ஆலயக் கட்டுமானப் பணியின் போது மணலேற்றிய லொறியின் சாரதியாக பணியாற்றிய சகோதர மொழி பேசுகின்ற சகோதர் ஒருவரை ஆலய வளவில் வைத்து லொறியில் வேலை செய்து கொண்டிருந்த போதே சுட்டுக் கொலை செய்து விட்டனர். அனைத்து மக்களும் பீதியுடனும் பயத்துடனும் வீடுகளில் முடங்கியிருந்தனர். பல்வேறு இடங்களிலும் பிரச்சினைகள் இடம்பெற்ற காலகட்டமாகவும் அது இருந்தது. ஆனால் சிறு பிரச்சினை கூட இங்கு இடம்பெறவில்லை. இதனை அனைத்து மக்களும் ஒரு புதுமையாகவே கருதுகின்றனர்.

Fr. கிரைட்டன் பணிக்காலத்தில் ஆலய வேலைகள் முழுமையாக நிறைவு பெறாத வேலையில் சுற்றுப்பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. கொட்டில் ஆலயத்தில் இருந்து சுரூபத்தை புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் கொண்டு வந்து வைத்த போது திடீரென மழை பெய்தது. கான்களில் நீர் வடிந்தோடியது. அன்று இரவு முழுவதும் அடைமழை பெய்தது. ஆனால் சுற்றுப் பிரகாரத்தின் போது தூரல் மழை கூட இருக்கவில்லை. அன்று பெய்தது போல கன மழை இந்நாள்வரை பெய்யவே இல்லை.

Fr. கிரைட்டனின் அயராத முயற்சியால் தான் ஆலயம் கட்டப்பட்டதுடன் ஆலயத்திற்கு செல்லும் வீதியும் போடப்பட்டது. ஆலயக் கட்டுமானப் பணியின் போது மறைமாவட்டத்தின் உதவி பெறப்படாத போதும் அனைத்து மக்களும் இணைந்தே கட்டப்பட்டது. இந்து மக்களும் நிறைவான உதவிகளைச் செய்தார்கள்.அவர்களுடைய உதவிகளை மறக்க முடியாது என Fr. கிரைட்டன் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெபி Fr. ஜெயரெட்ணம் காலத்தில் அமைக்கப்பட்டது. மாதா சுரூபம் பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. சிலுவைப்பாதை நிலைகள் Fr. ஜோர்ஜ் திசாநாயக்க

இன்று வரை ஆலயம் அமைக்கப்பட்டுள்ள காணிக்கான உறுதி பெறப்படவில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அவை வெற்றியளிக்கவில்லை. தனிப்பங்காக உருவாக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்த போதும் இங்கு நடக்கின்ற திருமணங்களைப் பதிவதற்கான அரச திருமண பதிவுப் புத்தகம் இதுவரை பெறப்படவில்லை. பங்கு மக்கள் திருமண நிகழ்வுகளின் போது அதிகளவான பணம் செலுத்தி பதிவாளர்களை அழைத்து வந்து திருமணப் பதிவுகளை மேற்கொள்கின்றனர். ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மண் அகழ்வு இடம்பெறுவதாகவும் அதனை தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை என்பதுடன் ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிகள் வனமாகக் காட்சியளிப்பதால் சில சமூக விரோத செயல்கள் இங்கு இடம்பெற்றதாக அறிய முடிந்தது. இருந்தபோதும் பங்குத்தந்தை றொய்சன் ஸ்பாக் அவர்கள் ஆலயத்தில் பல அபிவிருத்திகளை செய்துள்ளதுடன் பங்கு மக்களுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார். இங்கு இயங்குகின்ற முன்பள்ளி 40 ஆண்டுகளுக்கு மேலாக இயங்குகிறது. மேலும் இப்பங்கு சிறப்பான வளர்ச்சிகளைக் காண வேண்டும் என்பது எமது அனைவரதும் பிரார்த்தனையாகும்.

ஆலயத்தின் முகப்பிலிருந்து எமது மறைமாவட்டத்தின் சில பகுதிகளைக் காணவும் அழகான ரம்மியமான சூழலுடன் கூடிய இயற்கைக் காட்சியையும் பாரிய கப்பல்கள் கடலில் தரித்து நிற்பதைக் காணவும் உங்கள் மனக்குறைகள் தீரவும் விசேடமாக உங்கள் தோல் நோய்கள் உங்களை விட்டு அகலவும் பல புதுமைகளை நேரடியாகக் காணவும் அமைதியும் நிம்மதியும் உங்கள் மனங்களில் குடி கொள்ளவும் ஒரு நாளேனும் வனத்து அந்தோனியார் ஆலயத்தை தரிசியுங்கள். இவ்வாக்கத்தை உருவாக்க உதவியாக இருந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.


திரு. நா. சுரேஸ்
திரீகூடம்,
மூதூர்.

## பங்கில் இருந்து உருவான அருட்பணியாளர்


செல்வநாயகபுரம் குவாடலூப்பே பங்குடன் இணைந்திருந்த வேளையிலே அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்கவின் வழிகாட்டலின் துணையோடு குருத்துவப் பணியினை செய்வதற்கு அழைக்கப்பட்டார்.



அருட்பணியாளர். டே. அன்று ஸ்டீபன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தி
## அதி 07 - 09 வரை

- ❖ எவரும் பங்கு பற்றலாம்.
- ❖ போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ❖ போட்டியாளர்கள் சரியாக விடையளித்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. இயேசு தம் தாயும் சகோதரர்களும் யாரென எடுத்துக்கூறுகிறார்?

........................................................................................................

02. உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன, உமது நம்பிக்கை உம்மை மீட்டது, அமைதியுடன் செல்க என இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?

........................................................................................................

03. விதைப்பவர் உவமையில் விதைக்கச் சென்றவரின் விதைகள் எவ்வெவ் நிலங்களில் விழுந்ததாகக் கூறப்படுகின்றது?

........................................................................................................

04. இயேசு தோற்றம் மாறிய போது மேகத்தினின்று கேட்ட குரலொலி யாது?

........................................................................................................

05. இயேசு பன்னிருவரையும் அழைத்து தம் பயணத்தின்போது எவற்றை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டாம் எனக் கூறினார்?

........................................................................................................

06. தமது வீட்டை நோக்கி இயேசு வருவதை அறிந்த நூற்றுவர் தலைவர் தம் நண்பர்களை அனுப்பி அவரிடம் கூறச் சொன்ன செய்தி யாது?

........................................................................................................

07. இயேசு தம் சீடரைப் பார்த்து "நான் யார்?"என நீங்கள் சொல்கிறீர்கள் எனக் கேட்ட போது, பேதுரு கூறிய பதில் என்ன?

........................................................................................................

08. இயேசு தம் சாவை இரண்டாம் முறை தம் சீடர்களிடம் எவ்வாறு அறிவித்தார்?

........................................................................................................

09. இயேசு தோற்றம் மாறியபோது மலைமீது யாருடன் உரையாடினார்? அவரது தோற்றம் எவ்வாறாகக் காணப்பட்டது?

........................................................................................................

10.இறையாட்சிக்கு தகுதியற்றார் யாரென இயேசு கூறினார்?

........................................................................................................

11. "ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? இவ்வாக்கியம் எத்தனையாம் அதிகாரம் வசனங்களில் காணப்படுகின்றது?

........................................................................................................

12. "அஞ்சாதீர், நம்பிக்கையோடு மட்டும் இரும், அவள் பிழைப்பாள்" என யார் யாருக்குக் கூறியது?

........................................................................................................

13. "என்னைத் தொட்டவர் யார்?" என இயேசு ஏன் கேட்டார்?

........................................................................................................

14. சாகக் கிடந்த தொழுகைக் கூடத் தலைவரின் மகளுக்கு எத்தனை வயது?

........................................................................................................

15. இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன். அவர் உமக்கு முன் உமது வழியை ஆயத்தம் செய்வார்?

........................................................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பங்கு : ..........................................

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி
## விவிலியம் வாசிப்போம்

- ❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..........................................

முகவரி ..........................................

பங்கு ..........................................

தரம் ..........................................

முடிவுத் திகதி 15.05.2019

## நிறைந்த நிலை காணவே........
அருட்பணி. N.C. அருள்வரதன்

கவிதை வரிகளை
சரியாக வடிவமையுங்கள்
எல்லோரும் பங்குபெறலாம்
இதோ கவிதை வரிகள் ..........

- ❖ எங்கும் அமைதி வேண்டும்
- ❖ எதிலும் அமைதி வேண்டும்
- ❖ வார்த்தையின் வன்முறைகள்
- ❖ வாழ்வோடு வன்முறைகள்
- ❖ வேண்டாத நிலைகளினை
- ❖ வாழ்வோடு இணைய வேண்டாமே
- ❖ அமைதி சமாதானம் நல்லுறவுகளே
- ❖ வாழ்வுக்குத் தேவையானவைகள்
- ❖ நிறைந்த நிலைகளைக் காண்போமே
- ❖ இதயங்கள் இன்பத்தில் நிலைகொள்ளவே
- ❖ இவைகளை வாழ்வோடு இணைத்துக் கொண்டு


நன்றாக அவதானித்து
சரியாக வடிவமையுங்கள்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.05.2019

## கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி - 2018 முடிவுகள்

பங்கு கொண்டவர்கள் : 19 பேர்

பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு - 500/-
அ. யோசப் யேசுதாசன்
இல :676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

2ம் பரிசு 300/-
சு. பிறிஜட்
இல : 676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

3ம் பரிசு 200/-
ஜே. தேவேஷ்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி கற்போம்

01. நாசரேத் ஊரிலுள்ள தொழுகைக் கூடத்தில் வாசித்த ஏட்டுச் சுருளின் உரிமையாளர் யார்?

இறைவாக்கினர் எசாயா

02. இயேசு எவ்வாறான நிலைகளில் செபித்தார்?

ஆள்நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து

03. "கடவுளைப் பழித்துரைக்கும் இவன் யார்? கடவுள் மட்டுமன்றிப் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்" என யாரை யார் எண்ணிக் கொண்டனர்?

இயேசுவைப் பார்த்து மறைநூல் அறிஞரும் பரிசேயரும்

04. புனித யோசேப்பு எதற்கெல்லாம் பாதுகாவலர்?

திருச்சபை, தொழில், நன்மரணம், கற்பு

05. திருப்பலியில் கிறிஸ்துவின் உடனிருப்பு எங்'கெல்லாம் விளங்குகிறது?

நான்கு நிலைகளில்

1. நற்கருணையில் 2. இறைவார்த்தையில்
3. இறைமக்களில் 4. அருள்பணியாளரில்

06. திருப்பலியில் எத்தனை சடங்குகள் உள்ளன?

04

தொடக்க சடங்கு வார்த்தை வழிபாடு
நற்கருணை வழிபாடு முடிவு சடங்கு

07. தவக்காலத்தின் 03 படிகள்?

தவறுக்கு மனம் வருந்துதல்
தவறுகளுக்குப் பொறுப்பேற்றல்
அதற்காகப் பரிகாரம் செய்தல்

08. தவக்காலம் எப்போது முடிவடைகிறது?

பெரிய வியாழன் மாலைத் திருப்பலிக்கு முன்

09. தவக்காலத்தில் எத்தனை ஞாயிறு?

06 ஞாயிறு

10. தவக்காலத்தில் மாமிச தவிர்ப்பு நாட்கள் எவை?

திருநீற்றுப் புதன், பெரிய வியாழன், ஒவ்வொரு வெள்ளி

# ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் - 38
## எஸ்ரா 6 - 10 அதிகாரங்கள்

01. யூதர்களுக்கு கோவிலைக் கட்டி முடிக்க அனுமதித்தது யார்?
விடை :......................................................................................

02. எந்தக் குலத்தார் எருசலேமில் ஒன்று கூட்டப்பட்டனர்?
விடை :......................................................................................

03. எஸ்ரா என்பவர் யார்?
விடை :......................................................................................

04. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் எப்படிப்பட்டவர்?
விடை :......................................................................................

05. மன்னர் தாரிபு ஆட்சியில் எப்போது கோவில் வேலை நிறைவுற்றது?
விடை :......................................................................................

06. எஸ்ராவுக்கு பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு சென்றடைய எவ்வளவு காலமானது?
விடை :......................................................................................

07. மக்கள் எஸ்ராவுக்கு கூறியது என்ன? (கலப்புத் திருமணம் பற்றி)
விடை :......................................................................................

08. புனித இனம் வேற்று நாட்டு மக்களோடு கலப்பதற்கு முதற் காரணமானவர்கள் யார்?
விடை :......................................................................................

09. மாலைப்பலி வேளையில் எஸ்ரா எந்நிலையிலிருந்து ஆண்டவரை வேண்டினார்?
விடை :......................................................................................

10. அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்திருந்த மக்கள் அனைவரும் எங்கு ஒன்றாகக் கூட வேண்டும். எத்தனை நாட்களில்?
விடை :......................................................................................


பெயர் :.......................................................
முகவரி :.......................................................
பங்கு :.......................................................

முடிவுத்திகதி 15.05.2019

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி
## எபேசியர் அதி 1 - 6 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா | ன | த் | தோ | டு | வா | ழு | ங் | க | ள் |
| | | போ | ர் | வா | ளா | க | வு | ம் | |
| ம | க | மா | ல | கா | ழி | ஊ | | | தூ |
| ண் | ந | று | ம | ண | ம் | | | து | ய் |
| ணி | | இ | சை | பா | டி | | வா | மீ | மை |
| லு | மு | ழு | மு | ய | ற் | சி | ன் | பை | யி |
| ள் | கு | க் | ழு | மு | ரு | தி | வெ | ச | லு |
| ள | | போ | ற் | றி | | | ளி | ச் | ம் |
| வை | உ | ரி | மை | ப் | பே | று | யி | ரு | |
| | து | ணி | வு | ட | ன் | | ல் | தி | |


01. மண்ணிலுள்ளவை
02. ஊழிகாலமாக
03. தூய்மையிலும்
04. திருச்சபை மீது
05. போர்வாளாகவும்
06. உரிமைப்பேறு
07. திருமுழுக்கு
08. போற்றி
09. முழுமுயற்சி
10. நறுமணம்
11. ஞானத்தோடு வாழுங்கள்
12.வான்வெளியில்
13. துணிவுடன்
14. இசைபாடி



**போட்டியில் கலந்து கொண்டோர் : 93பேர்**
**மிகச்சரியாக விடையளித்தோர் : 74 பேர்**

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
டெலிஷா நெவில்ராஜ்
இல. 360,
திருஞானசமத்பந்தர் வீதி,
திருகோணமலை



2ம் பரிசு 300/- ரூபா
ஆ. டெவோன்ஷா
இல 43,
அன்னை வேளாங்கன்னி வீதி,
பாலையூற்று

3ம் பரிசு 200/- ரூபா
ஜீ. ஷெபானா
இல 12, பீலியடி,
கன்னியா

# பாராட்டுக்குரியவர்கள்

01. ஆன் நதுஷிக்கா - பேராலயம்
02.கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்
03.ஜே. ஸ்டீவ் ஆகாஸ் - இலிங்கநகர்
04.சு. சுபாஜினி - சகாயபுரம்
05பீ. ஆன் பிரசில்டா - இலிங்கநகர்
06.சு. பிரித்துவிராஜ் - கன்னியா
07.செ. செல்வராகினி டிஷாசிகா - கன்னியா
08.சு. மேரிகில்டா - கன்னியா
09.Fr. J. சுதர்சன் - கன்னியா
10 P. துஷான் கிறிஸ்டி - கன்னியா
11.சு. சர்வின் - கன்னியா
12.சு. ஆகாஷ் - கன்னியா
13.சு. ஜனக்ஷன் - கன்னியா
14.அலஸ்டினா - கன்னியா
15.B. திவ்வியா - கன்னியா
16.N. நிவேதன் - கன்னியா
17.சு. விக்டோரியா - கன்னியா
18.P. ரவிதா - கன்னியா
19.சு. டிலிக்ஷனா - கன்னியா
20.சு. டிஷாந் - கன்னியா
21.K. றோஸ்மலர் - கன்னியா
22.செ. தனுஷிகா - கன்னியா
23.து. வினோத் - கன்னியா
24.செ. நிவேதிக்கா - கன்னியா
25.லிந்துஜன் - கன்னியா
26.வு. டெல்சினி பீரிஸ் - கன்னியா
27.மை. யஸ்வின் - பேராலயம்
28.அல்போன்சியா - அன்புவழிபுரம்
29.மை. யுவான் ஜெரமி - உவர்மலை
30.லி. அன்றியா ஸ்டெபனி - பாலையூற்று
31.நா. மெற்றில்டா - பாலையூற்று
32.வெ. பெனடிக்ஷன் - கும்புறுப்பிட்டி
33.துரைராஜா மிஷேல் - அன்புவழிபுரம்
34.லொ. அஸ்வின் - நிலாவெளி
35.லெ. கிறிஸ்ஸோ - நிலாவெளி
36.T. நான்சி - செல்வநாயகபுரம்
37. ரவிச்சந்திரன் அக்ஷே - இலிங்கநகர்
38.ஜே. யூடி குரூஸ் - பேராலயம்
39.தே. சமில்டன் - நிலாவெளி
40.அ. கிஷான் - குவாடலூப்பே
41.S. டெல்மா றொசானி - சகாயபுரம்
42.அ. கரோலினி கிறீப்திக்கா - பேராலயம்
43.நேமிநாதன் சரணியா - கும்புறுப்பிட்டி
44.யே. டிவேரூஞ்சன் - அன்புவழிபுரம்
45.லோ. வினோத் - கும்புறுப்பிட்டி
46.திரேசா சேவியர் - பேராலயம்
47.A.மோட்சமேரி - சகாயபுரம்
48.தேனுகி கிரிதரன் - பேராலயம்
49.ஜி. கெய்சர் கெவின் - குவாடலூப்பே
50.ம. லினுஷா - உவர்மலை
51.ரூ. நிக்ஸன் - சகாயபுரம்
52.முகமட் காசிம் றொசில்டா - பாலையூற்று
53. A.அமலோற்பவம் - சகாயபுரம்
54. R. ஹஜிசிந் - இலிங்கநகர்
55. A.J. மேரி கொலின் - அன்புவழிபுரம்
56.சு. பகீதரன் - அன்புவழிபுரம்
57.K. புஸ்பம் - பாலையூற்று
58.T. இவாஞ்சலின் - உவர்மலை
59.N. டனிஸ் ஷரோன் - குவாடலூப்பே
60.சு. எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
61.S. ஸரிஷென் - நிலாவெளி
62.கிரிஸ்டினா அன்றாடோ - சாம்பல்தீவு
63.சு. கிப்சன் - நிலாவெளி
64.டெ. சுரணியா - அன்புவழிபுரம்
65.அபிராமி தனுஷன் - பாலையூற்று
66.டொ. தர்சியா - சகாயபுரம்
67.ம. கபினா - பேராலயம்
68.சு. சுவேக்கா - பாலையூற்று
69.ட. ஜிரேன்சியன் - நிலாவெளி
70.சு. கௌசல்யா - பாலையூற்று
71.ட. டெபோரா - நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15804

# திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை புதிய ஊக்குவிப்பாளர்களுக்கான 1வது அமர்வு





திருகோணமலை மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை சேவியர் ரஜீவன் அவர்களின் ஒழுங்கமைப்பில் 23.02.2019 சனிக்கிழமை எகெட் கரித்தாஸ் மண்டபத்தில் திரு.மலிகன் (சட்டத்தரணி), அருட்தந்தை. மதுராங்கன் குரூஸ், திரு. பாக்கியநாதன், அருட்தந்தை. சேவியர் ரஜீவன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு ஊக்குவிப்பாளர்களை ஆயத்தப்படுத்தினார்கள்.

அன்றைய தினத்தில் வன்முறையற்ற தொடர்பாடல், விசேட பணிக்கான அழைத்தல்கள், திருப்பாலத்துவ சபை ஊக்குனர்களின் தலைமைத்துவ பண்புகள், சிறுபிள்ளைகள் மறைபரப்பு தலின் அவசியம் பற்றி கலந்துரையாடி ஊக்கப்படுத்தினார்கள். தொடர்ந்து குழுச் செயற்பாடுகளும், கலந்துரையாடல்களும் சிறப்பம்சமாக அமைந்திருந்தன.

**தகவல் : ஊக்குவிப்பாளர்கள்**

# ஓராண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 | | 23 |
| 11 | | 04 |
| 1935 | | 2018 |



## அமரர். சி. பாவுல்பிள்ளை

அன்பு தந்தையே.....நீர்
எம்மை விட்டுச் சென்றாலும் - உம்
நினைவுகளும் முன்மாதிரிகைகளும்
எம்மை விட்டுப்போகாது
கோழி தன் குஞ்சை பாதுகாத்தது போல்
கண்மணி போல் காத்து
கடந்து வந்த காலங்களில்
கதைகள் பல சொல்லி வாழ்வின்
அர்த்தத்தை இறை ஞானத்தோடு புகட்டி
வாழ வைத்த தந்தையே - உம்
ஆன்மா இறைவனில்
இளைப்பாற மன்றாடுகின்றோம்.

**பிரிவால் துயருறும் - குடும்பத்தினர்**

# திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை புதிய ஊக்குவிப்பாளர்களுக்கான 2வது அமர்வு



திருப்பாலத்துவ தேசிய இயக்குனர் அருட்பணி. பெசில் றொஹான் மற்றும் தேசிய திருப்பாலத்துவசபை குழுவினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இவ் அமர்வு மடுத் தியான இல்லத்தில் 02.03.2019 சனிக்கிழமை ஆரம்பமாகி 04.03.2019 திங்கட்கிழமை அன்று திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியுடன் புதிதாக இணைந்து கொண்ட திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வுடன் இனிதே நிறைவு பெற்றது. திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து 28பேர் கலந்து கொண்டனர். வளவாளர்களாக, அருட்பணி.அ.நவரெட்ணம், திரு.பாக்கியநாதன், அருட்தந்தை. சேவியர் ரஜீவன், கலந்து கொண்டு 2வது சின்னம் பெற ஆயத்தப்படுத்தினார்கள்.



அதில் திருப்பாலத்துவ சபையினரின் நோக்கங்கள், பணியாளர்களின் சவால்கள், கிறிஸ்துவுக்கு சாட்சி பகருதல், சிறிய மறைதூதுவர்களை உருவாக்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடல்கள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் ஊடாக வெளிக்கொணரப்பட்டன.





தொடர்ந்து ஒப்புரவு அருட்சாதனம், திருப்பலி, நற்கருணை வழிபாடு என்பன ஊக்குவிப்பாளர்களின் ஆன்மீகத்தை திடப்படுத்த உதவியாக இருந்தது. பல ஊக்குவிப்பாளர்கள் தங்களை முற்றுமுழுவதுமாக அர்ப்பணித்து வாக்குறுதி கொடுத்தார்கள். இவற்றிற்கு அடையாளமாக திருப்பலியின் போது திருவிவிலியம், இயேசுவை நான் அன்பு செய்கிறேன் என்ற வார்த்தைகளை தாங்கிய சிலுவை, உத்தரியம் போன்றவை ஒவ்வொரு ஊக்குவிப்பாளருக்கும் வழங்கப்பட்டது.
ஆயரின் கரங்களினால் வழங்கப்பட்ட சின்னம், சான்றிதழ் ஊக்குவிப்பாளர்கள் நிரந்தர அங்கத்தவராக்கப்பட்டதை உறுதிப்படுத்தியது.



இவ் 2ம் அமர்வு சிறப்புற சகல ஆயத்தங்களையும் மேற்கொண்ட தேசிய இயக்குனரை நன்றியோடு இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். அத்துடன் திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயர் அதிவண. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களுக்கும், மறைமாவட்ட மறைபரப்பு பணிகளின் இயக்குனர் அருட்பணி. X. I. றஜீவன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல் : ஊக்குவிப்பாளர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org